[illegible]

V 5 No. 10 10 Mm 1932

JL
ണ2·11, N28KN
N32·5·10
188958

KALANILAYAM
தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

18 MAR 1932

Vol 5] 1932 ஞூ மார்ச்சு மீ 10உ [No. 10

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 181
2. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 183
3. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 185
4. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 187
5. வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்)
T. S. நடராஜப்பிள்ளை B.A. B.L. 189
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 2. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 192
7. கம்பராமாயணம் (அகத்தியப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 195
8. தினகர வெண்பா (செய்யுள் முதற் குறிப்பு)
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 197
9. வர்த்தமானம் 199

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 2.

இன்பதுன்பங்கள் விதிவசத்தால் விளைகின்றனவேயன்றி நம்முடைய வித்தகத்தால் துய்க்கவும்விலக்கவும்வல்லன அல்லவென்றெண்ணலெத்திறத்திலும் ஏற்றதொன்றன்று. புறத்தினின்று நம் உடலினுக்கு வரும் ஊறுகளை ஒருகால் நாம் தடுக்கமாட்டாதவர்களாகலாம். கொடிய நோய்களும் நினையாத விபத்துக்களும் நேர்ந்து உடலிற்குத் துன்பமேனும் உயிரிற்கு இறுதியேனும் உண்டாக்குமது ஒரோவழி நம்முடைய மதியினால் காக்கவல்லன ஆயினும், எல்லாக் காவல்களையுங்கடந்து அவைதாம் நம்மைத் தொடர்கின்ற தன்மையைக் காண்கின்றோமாதலின், விதிப்படியே விளைந்தனவெனக் கொள்வதல்லால் வேறுவகையில் விளம்புதற்கில்லை. எனினும் என்! உடல்நோயும் மரணமும், உண்மையே நோக்குங்கால், ஒருவன் சரித்திரத்தில் மிகச்சிறு விடயங்கள். உடல்நோய்களெல்லாம் இடைப்பிறவரல்கள்; மரணமும் அவன் சரித்திரத்தில் ஓர் 'அத்தியாயம்' முடிவடைகின்றதென்பதைக்காட்டுவதல்லால் வேறன்று. நோய்செய்வது துன்பம்; மரணம் துன்பங்களின் கழிவாயிருப்பினும் இருக்கலாம். மற்று மாரிஸ்மேடர்லிங்க் உரைக்கின்றபடி இக்காலம், ஆங்காங்கு ஒவ்வோர் நோய் ஒவ்வொரு மனிதனைத் துன்புறுத்துகின்றதென்னின், துன்பமே மனிதரென்றிருப்போரையெல்லாம் பற்றியுள நோயாக இருக்கின்றதே. இவ்வாறு இருக்கவேவேண்டுமென்பதுதான் கடனோ, அல்லது வேறுதான் நெறியுண்டோ! விதியின்வன்மையாலோ அல்லது மதியின் புன்மையாலோ இந்நிலை வந்திறுத்தது?

இவ்வரிய ஐயத்தினைத் தீர்த்துக்கொள்வதன்முன் மறக்கலாகா ஒரு இரகசியத்தை நாம் உட்கொள்ள வேண்டும். நம்முடைய தன்மையே போன்றதல்லாததொன்றும் நமக்கு நேர்ந்திடாது. இதன் பொருள் யாதெனச் சிலர் தாழலாம். பின்வருவன இதன் உட்கருத்தை விளக்குவதாகும். நம்முடைய தினப்படி நினைவுகளின் உருவத்தையே நமது ஆன்மாக்களுக்குக் கொடுத்துத் தோற்றுவிக்கும்படி நம்மை வந்தடைந்த செய்திகளெல்லாம் முடிகின்றன. வீரம்பெரிதுடைய செயல்கள் ஒருவன்செய்தானெனின், ஒருமுறை அவனதனைச் செய்வதன்முன் பன்முறை வீரஎண்ணங்கள் எழுந்தெழுந் தமர்ந்த வாழ்க்கையனாயிருந்திருத்தல் வேண்டும். மலைமீது ஏறினாலும், காடுகளிற் றிரிந்தாலும், வீடுதோறுஞ் சென்றாலும், தன்மனையின் கூடத்தில் நடந்தாலும், உலகத்தைச் சுற்றித் திரிந்தாலும், விதியின் நெடிய பாதையில் தன்னையேயன்றி வேறெவரையும் ஒருவனுஞ் சந்திக்கமாட்டான். சிபி சக்கிரவர்த்தி இன்றையதினம் வெளியிற் புறப்பட்டானாயின் இன்னொரு சிபியினிடத்திற்கே அவனுடைய கால்கள் அவனைச் செலுத்தும். மறு தலையில் இவனை ஏற்றற்குப் புறவொன்றும் விரைவுடனெதிருறத்தோன்றாமற்போகாது. வசிட்ட முனிவர் தன்வீட்டுக்கதவைத் திறப்பாரெனின், வசிட்டமுனிவரே தன்வீட்டுத் திண்ணையின்கண் நிட்டையிலிருக்கக் காண்பார். மெய்யறிவு பெருகுவதற்கு ஓர் சந்தர்ப்பம் இங்கும் ஏற்படும். இதற்கெதிர், சகுனி புறப்பட்டானால் அவன் செல்லுமிடமெல்லாம் சகுனிமார்களையே சாலச் சந்தித்துக்கொள்பவனாவான். அவன் காணுமிடமெல்லாம் கவறுகருவிகளே கிடக்கும். மற்றவரை வஞ்சனையால் வென்றழித்தற்குரிய வசதிகள் அவனுக்கு வாய்க்காமற்போகா. இன்னவாறு, நம்மோடு ஊடாடவருகின்ற மனிதர்

களும் விடயங்களும் நம்மகத்தே பலகால் தோன்றித் தோன்றி உரம்பெற்ற எண்ணங்களின் உருவங்களேயன்றிப் புறத்தினின்று புதியதாய் வருஞ் செய்திகளே என்று முற்றிலுங் கொள்வதற்கில்லை. இவ்வுண்மையைத்தான்முன், "நம்முடைய தன்மையே போன்றதல்லாதவொன்றும் நமக்கு நேர்ந்திடாது" என்னும் வாக்கியத்தால் குறிக்க நினைத்தோம்.

ஒவ்வொருவருக்கும், அவரவருடைய நினைவுகளும் நோக்கங்களும் சொற்களும் செயல்களும் யாவும் ஒற்றுமைப்பட்டு உள்ளடங்கும்படியாய தாயெண்ணம் ஒன்று இருக்கும். இந்தத் தாயெண்ணம் வதியுமிடந் தெரியாமல் இருந்துகொண்டு அம்மனிதனுக்கு நேர்கின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் இயற்றிவைக்கின்றது. இது வெளிப்படாதவரையிற்றான் ஒருவனுக்குநேரும் விடயங்கள் ஒற்றுமையற்றுப் பலதிறப்பட்டவைகள் போலத் தோன்றும். இத் தாயெண்ணந்தான் இன்னதென்று நமக்கே தெரியத்தலைப்பட்டவுடன், அதற்கு இனமானவைகளெல்லாம் ஒருங்குடன் திரண்டுவந்து நம்மைச் சூழ்ந்துகொள்வன ஆகும். நமக்குவரவேண்டியவைகளெல்லாம், நம்முடைய உள்ளத்தினின்று நாம் என்ன கொடியை உயர்த்துகின்றோம் என்பதை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருப்பனபோலவேதோன்றுகின்றன. ஒருவனது தாயெண்ணம் பொய்யும் வஞ்சனைகளுமேயாயின், பொய்யும் வஞ்சனையுமே அவனைப் புடைசூழ ஓடிவரும். தாயெண்ணமாய்த்தோன்ற நின்றுயர்த்திய கொடி அன்பும் அருளுமாயின், அன்பும் அருளுந் தழைக்கின்ற நிகழ்ச்சிகள் தாமே அவனைத் திரண்டுசேரும். நம்வயின் நிகழ்கின்ற அனைத்தையும் இந்தவோர் தாயெண்ணத்தைத் தலைவைத்து நோக்குவோமெனின் விதியின் வன்மை எத்தூரம் செல்லவல்லதென்பதைச் சோதித்தறிவது ஒருவாறு எளியதாகுமென மதிப்பதற் கிடமுளது.

இன்பத்திற்குரியவைகள் என்பனவும் துன்பத்திற்குரியவைகள் என்பனவும் நமக்குப் புறத்தினின்றுவந்தெய்துகின்றனவாயினும், அவ் இன்பமும் துன்பமும் நம்மகத்தே நம்மாலாயே நிகழப்பெறுவன என்பதில் ஏதேனும் ஐயமுண்டோ? இந்த இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அதிபதியாயிருந்து அமைத்து வைப்பது அவரவர் விதியே என்பது உலகத்தில் நடைபெறும் பொதுக் கருத்து. இதுபற்றியே, "வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின் எனப் போகா" என்னும் முதுமொழி வழங்கலாயிற்று. வருவனவும் போவனவும் விதியின் வயமாகலாம். எனினும் ஒன்று உணர்தல் வேண்டும். மனிதர் வருந்தியழைப்பதும் விரைந்து தூரத்துவதும் இன்பதுன்பங்களுக்குக் காரணமாயிருக்கின்றவைகளெனக் கருதப்படும் பொருள்கள் நிகழ்ச்சிகள் விடயங்கள் முதலியவைகளையே யல்லாமல் இன்பங்களையும் துன்பங்களையும்அல்ல. இவ்வேற்றுமையை உற்று நோக்கினாலன்றி உணர இயலாது. விடயங்களைத்தான் வாவென்றும் போவென்றும் வேண்டினனுய் நெடுந்தூரம் நினைந்திரங்கி நெஞ்சம்பெரிதுபுண்ணுகின்றான் மனிதன். அவை தன் இச்சையின்படி வருவதும் போவதும் நேராமையால் வருத்தமொன்றே எஞ்சியதாகின்றது. மற்று, விடயத்தொடர் பின்றியேயும் இன்பமுந் துன்பமுந் தனக்குரியதாகலாம் என்பதுணர்வானாயின் விதியின் வலியை அவன்பெரும்பாலும் வென்றழித்தபடியாகும். "என்னுடைய இன்பத்திற்காக இன்னபொருள், இன்ன நிலை, இன்னார் இச்செயல் வேண்டும்" என்னக் கூவிக் கூவி உழலாமல், இன்பத்தைமட்டும் வருந்தி யழைத்தக்கால் வேண்டளவு இன்பம் வந்தேதீரும் என்பதை மறத்தலாகாது. அல்லது, "இன்னபொருள், இன்ன நிலை, இன்னார் இச்செயல் போனால் என்னுடைய துன்பம்போம்" என்ன அவைகளைத் தூரத்தியடிக்கத்துடிக்காமல், துன்பத்தைமட்டுமே போக்குதற்குப் புரிந்தக்கால் அது போய்த்தான்தீரும். அன்றியும், துன்பப் பொருள்களின் சூழ்ச்சிகளையும், இன்பநிலைக்குரியவைகளாய் மாற்றிக்கொள்வதும் மனிதனது மனத்திற்கு, முயன்றக்கால், இயலாததொன்றன்று. இவ்வண்ணம், புறத்தினின்று புரிபவைகளுக் காளாகாமல் உள்ளத்தளவே நிற்பதுதான் வித்தகத்தின் செய்தியாம். வருவனவும் போவனவும் விதியின் வயம், மற்று இன்பமுந் துன்பமுமோ வித்தகத்தின் வாய்மை, எனல் வேண்டும்.

என்றக்கால் என்ன பயன்? இத்தகைய வித்தகந் தான்யாதென்னத் தேர்ந்துகொள்ளல் வேண்டாவோ? ஆயினும், பேரறிவு மெய்ஞ்ஞானம் முதலிய பொருள்களைத் தாங்கியுள்ள இச்சொல்லை யாம் வரையறுத்து இயம்பமுயல்தலாகாது. முயல்வோமெனின் வரம்பின்றிப் பரந்துள அதன் பெருமையைச் சுருக்கிட்டுமுடிந்ததாகும். வெளிச்சத்தின் தன்மைதான் இன்னதென்று ஆராய விரும்புமொருவன், அருகிலுள்ள விளக்குகளை எல்லாம் அவித்துவிட்டுத் தன் ஆராய்ச்சியை ஆரம்பிப்பானாயின், புகைகின்ற திரிகள்தாம் அவன் கைக்கு எட்டினவைகளாகும். இலக்கணவரையறை வேண்டுவோர்க்கெல்லாம் விளையும் பயன் இன்னதே. வித்தகம் என்றக்கால் அது யாதென்பதை எத்திறத்தோரும் ஒவ்வோரளவு உணர்வார். அவ்வளவிலேயே நாமதனை ஏற்றுக்கொள்வோம். காதல் அன்பு என்பன போல்பவைகளை என்னென்று வரையறுத்து எவ்வித உருவத்தால் தெரியக்காட்ட வல்லவராவோம்? காதலைப்போல் அறியப்படாத அதன் ஆழமே வித்தகத்தின் அழகிற்சிறந்த உருவமுமாகும். வித்தகத்திற்கு உருவமென்பதொன்று வேண்டவும் வேண்டா. தீச்சுடரின் அழகைப்போல் வித்தகத்தின் அழகும் மாறிமாறித் தோன்றும் பெற்றியதாகும். பீடமிசை நிறுவிய ஒரு பொற்சிலையன்று அது. நாம் விண்ணோக்கி உயர்கின்றபோது நம்மோடு உயர்ந்தும், மண்ணூடு வீழ்கின்றபோது நம்மோடு வீழ்ந்தும், அழுகின்ற நம் கண்ணீரில் தன் கண்ணீரைக் கலந்தும், சிரிக்கின்றபோது நம்மோடு சிரித்தும் இடைவிடாது நம்மைத் தொடர்ந்து வருகின்ற தெய்வமே ஆகும் அது. நம் இளமைதொட்டு இறக்குமளவும் மாறாது ஒருபடித்தாய் இருக்குமொரு வித்தகம் உண்மையாயவித்தகமன்று. வித்தகம் என்றசொல் விளக்குகின்றபொருள்கள் ஒருவனுக்கு அதிகமாக அதிகமாக, அதன் அழகும் ஆழமும் பெருகுவதாகி அவனது வித்தகமும் வளர்ச்சியடையப்பெறும். இவ் வித்தகவழியில் வைத்து நடக்கின்ற ஒவ்வொரு அடியும், கடந்து முடியலாகாப் பெருவெளியைப் போதிக்கவே படர்கின்றதென்னலாம்.

குன்றுடையானும் மக்களும்

[164-வது பக்கத் தொடர்ச்சி]

18 MAR 1932

7. குன்றுடையான் மனைவி மகப்பேறு இன்மையால் வருந்தியது.

கோழை படாத மேழிச் செல்வத்தைப் பெற்றுக் குன்றுடையாக் கவுண்டனும் அவன் மனைவியும் வாழ்ந்திருக்கும் நாளிலே, மகப்பேறில்லாத குறை அவர்கள் மனதை வருத்திற்று. தாமரை வளர்த்த பசுக்கள் மலடாயின; எருமைகள் மலடாயின; குதிரைகள் மலடாயின; நாய்கள் மலடாயின; பூனைகள் மலடாயின; பன்றி பல குட்டிபோடும் என்பார்கள்; உறையூரிலிருந்து கொண்டுவந்து அவள் வளர்த்த பன்றியும் மலடாயிற்று; அவளுடைய பணிப்பெண்டிரும் மலடிகளாயினர்; அடிமைப் பறைச்சியும் மலடியானாள்.

மலடி மலடியென்று வையகம் ஏசக்கண்டு தாமரை, மனம் நொந்து, ஏங்கி, 'ஐயோ! சிவனே! பிள்ளைப் பேறில்லாமல் நான் பெருமலடியானேனே. காயாமலடி கருமலடியானேனே' என்று துக்கித்து, மகப்பேற்றின் பொருட்டுச் சிறிதுஞ் சோர்வில்லாமல் அனேக வருடங்கள் தான தருமங்கள் செய்தாள். ஏழை பரதேசிகளுக்கு அன்னதானஞ்செய்தாள்; சொர்னதானஞ் செய்தாள்; கல்லென்ற கோவிலெல்லாம் கண்டு பணிந்தாள்; பூசையில்லாக் கோவில்களுக்கெல்லாம் பூசை நடத்துவித்தாள்; வாகனங்கள் செய்துவைத்தாள்; புதுக் கோவில்களைக் கட்டுவித்தாள்; வாவி குளங்கள் வெட்டுவித்தாள்; சாலையுந் தோப்பும் அமைத்தாள்; எண்ணெய் மடமும் தண்ணீர் மடமும் வைத்தாள்; சுமைதாங்கி நிறுத்தினாள்; மடங்கள் கட்டினாள்; திதியென்று வந்தபேர்க்குக் கோதானங் கொடுத்தாள், வஸ்திரதானம் அளித்தாள்; வேதியர்க்கு விவாகம் பண்ணுவித்தாள்; வெள்ளிவெண்கலத் தானம் அளித்தாள். இவ்வளவு செய்தும் மகப்பேறு வாய்க்கவில்லை.

ஒருநாள் கணவன் அருகிருக்க, தாமரை பொன்னிராட்டைச்சுற்றுகையில் அவர்கள் பேசிக்கொண்டது வருமாறு:

'கொழுமுனை தேடியது கோடி பொன் உண்டு. மோர் விற்ற காசு மூன்று லக்ஷமாயிற்று; பால் விற்ற காசாலே பாக்கியம் பெருகிற்று; தயிர்விற்ற காசு தங்கக் களஞ்சியமாயிற்று. ஆண்டவனருளால் நமக்கு உண்ணச் சோறும் உடுக்கத் துணியும் உண்டு. உங்களுக்கும் வயது எழுபதாயிற்று. நானும் கிழவியானேன். நாம் இன்னும் அறியாப் பிள்ளைகள்போல் இருக்கின்றோமே!'

'ஆம். இனி என்ன செய்யச் சொல்லுகிறாய்?'

'நானும் மலடியானேன்; நான் வளர்க்கும் மிருகங்களும் மலடாயின; என் வேலைக்காரிகளும் மலடிகளாயினர்; என் அடிமைப் பறைச்சியும் மலடியாயினள். மலடி மலடியென்று என்னை வையகம் ஏசுகின்றதே! பிள்ளையில்லாச் சோறு புழுவுக்குச் சமானம்; மஞ்சனில்லாச் சோறு மருந்துக்குச் சமானம். கிண்ணியில் இட்ட சோற்றைக் கிறியுண்ணப் பிள்ளையில்லை; வட்டிலில் இட்ட சோற்றை வாரியுண்ணப் பிள்ளையில்லை. நான் என்ன செய்வேன்!'

'அடி, பைத்தியக்காரி! இல்லாத பிள்ளை இனி எப்படிவரும்?

'நான் நிறைநாழி கேட்டோர்க்குக் குறைநாழி அளந்தேனோ? அன்னத்துக்கு வந்தபேரை அடித்துத் துரத்தினேனோ? நான் ஒரு பாவத்தையும் அறியேனே. என் வயிற்றுப் புழுவால் மலடியென்ற பேராயிற்றே. ஈசா! செய்யாத தானதருமங்களையெல்லாம் செய்தேனே; என் பிள்ளைக்கலி தீர்க்கவில்லையே!'

'அடி, அழாதே. தலையெழுத்தைத் தவிர்க்க முடியுமா?'

'நாம் கண் மூடியபின் காணிக்குப் பிள்ளையெங்கே? நம் கால்மாட்டில் எந்தப் பிள்ளை நின்று அழும்? தலைமாட்டில் எந்தப் பிள்ளை நின்று அழும்? நமக்குக் கொள்ளிவைக்கப் பிள்ளை யெங்கே?'

"வீணுக ஏனடி யழுகிறாய்? இனி நானும் அழவேண்டுமோ?'

'மக்களைப் பெறவேண்டும்; வாரியெடுத்து முத்தமிடவேண்டும்; அவர்களுடைய மழலைச் சொற்களைக் காதால் கேட்கவேண்டும்; அவர்களுடைய தளர்நடையைக் கண்களாற் பார்க்கவேண்டும்; அவர்களுடைய பசிய மேனியைத் தழுவிக்கொள்ளவேண்டும். இந்த ஆசை எப்பொழுது நிறைவேறும்?'

'பாய்ச்சலூரில் பங்காளிகளுக்குக் குழந்தைகள் பலர் இருக்கின்றார்கள். அவர்களில் நீ இருவரைத் தத்து எடுத்துக்கொள்ளலாமே. நமக்குப்பின் அவர்கள் நமது சொத்தை யநுபவிக்கட்டுமே.'

'ஆகாது, ஆகாது. ஊரார் பிள்ளை நமக்கு உதவாது. பாதகர்களான அப்பங்காளிகளுடைய மக்களும் பாதகர்களாகவே இருப்பார்கள். பெற்றால் சொந்தப்பிள்ளை பெறவேண்டும்."

'என்னவோ செய்.'

'வெள்ளிவள நாட்டில் என் தம்பிமார்க்கு ஆறு புத்திரரும் இரண்டு புத்திரிகளும் இருக்கிறார்களாம். நான் போய் அவர்களைப் பார்த்துவருகிறேன்.'

'அவர்கள் வீட்டுக்கு ஏனடி நீ போகிறாய்? உன் தந்தை செய்ததை மறந்துபோனாயோ? உன்னை யவர்கள் மதிக்கமாட்டார்கள், போகாதே.'

'நீங்கள் இப்படிச் சொல்லலாமா? என் தாய்தந்தையர்கள் காலஞ்சென்றார்கள். என் தம்பிமார், சிவக்கொழுந்தும் மருக்கொழுந்தும் என்னிடத்தில் மிக்க அன்புள்ளவர்கள். அவர்கள் மீது வீணுகக் குற்றஞ் சொல்லாதீர்கள். நான் போய்க் குழந்தைகளைப் பார்த்துவருகிறேன். நீங்கள் வராவிட்டாலும் என்னைத் தடைசெய்யாமல் அனுப்பிவையுங்கள்'

'அப்புறம், உன்பாடு. நான் சொல்வதைச் சொன்னேன். போகவேண்டுமானால், போய்வா. நீ போவது எனக்குப் பிடிக்கவில்லை'

ஐயன் குன்றுடையான் சாப்பிட்டுப் போனபின் தாமரை, உக்கிராணத்து உப்பிலியக் குப்பமுத்தையனுப்பி, அவ்வூரிலுள்ள ஆறுபேர் தட்டார்களைப் பட்டறையோடு அழைப்பித்து, வேண்டிய தங்கமும் வெள்ளியுங்கொடுத்து, ஐயாயிரம் பொன் பெறும் தங்க நகைகளையும் ஆயிரம் பொன் பெறும் வெள்ளி நகைகளையும் விரைந்து செய்யப் பணித்து, பத்து

188958

நாளில் அவற்றை முடித்துக் கொடுத்தால் தக்க கூலியும் பரிசும் அளிப்பதாகச்சொன்னாள். தட்டார்களும் அரண்மனையிற் பட்டறைவைத்து, உடனே வேலை தொடங்கி, தாமரை விரும்பியவாறே, வீரதண்டைகளும், சரப்பணிகளும், சிறுகாதுக் கொப்புகளும், நகைகளும், காப்புக்களும், கொலுசுகளும், உச்சிக் குப்பிகளும், தங்கத்தினாற் புள்ளிமான்களும், வெள்ளியினால் எறிபந்துகளும் முச்சில்களுஞ்செய்துமுடித்து அவற்றை யடுக்கிவைக்க வெள்ளியினால் ஒரு பெட்டியுஞ் செய்துகொடுத்து, தாமரை அளித்த, கூலியையும் பரிசையும் பெற்றுக்கொண்டு போனார்கள்.

பின்பு தாமரை, தாதியர்களைக்கொண்டு அன்னச் சம்பா நெல்தீட்டி, முறுக்கு தேன்குழல் முதலான பலகாரங்களைச் செய்து பேழைகளில் அடக்கஞ்செய்தாள்; பலவிதமான இனிய பழங்களைச் சேகரித்துக் கூடைகளில் அடுக்கிவைத்தாள்.

அன்று காட்டுக்குப்போயிருந்த குன்றுடையான் மாலைப்பொழுதில் திரும்பிவந்து, சாப்பிட்டு, திண்ணையை அடைந்து, அங்கே ஒருபுறத்தில் அடுக்கிவைத்திருந்த பேழைகளையும் கூடைகளையுங்கண்டு, தன் கவைக்கோலால் அவற்றின் மூடிகளை நீக்கிப்பார்த்து, புன்னகைகொண்டு, மனைவியை நோக்கி, 'தாமரை, இவைகள், எல்லாம் எதற்காக?' என்றான்.

"நான் அன்றே உங்களிடம் சொன்னேனே. தம்பிமார்மக்களைப் பார்ப்பதற்கு வெறுங்கையோடு போகக் கூடாதென்று இவற்றையெல்லாம் சித்தப்படுத்தினேன். நான் போய்வர இரண்டு வாரம் ஆகும்'' என்றாள் மனைவி.

'சரி, போய் வா. நீ போனால் அவர்கள் மதிக்கமாட்டார்களென்று சொன்னேன். போகவேண்டும் என்று ஆசைப்பட்டு, இவற்றையெல்லாம் சித்தப்படுத்திக் கொண்டபின் நான் தட்டிச்சொல்ல விரும்பவில்லை. அங்கே நெடுநாள் தாமதியாதே,'' என்றான் கணவன்.

மறுநாட் காலையில் தாமரை கணவன்பால் விடைபெற்று, பழக்கூடைகளையும் பலகாரப் பேழைகளையும், வழியில் அங்கங்கே தங்கிச் சமைப்பதற்கு வேண்டிய உணவுப்பொருள்களையும், பாத்திரங்களையும் பத்து ஆட்கள் சுமந்து முன்னேசெல்ல, நால்வர் தாதிமார் நகைப்பெட்டியோடு பின்தொடர வெள்ளிவளநாட்டுக்குப் புறப்பட்டாள்.

மூன்றுநாள் வழிநடந்து, நான்காம் நாள் தாமரை தான் பிறந்தஊரை யணுகினாள்.

அவ்வூருக்குப் பக்கத்தில், தாமரை போகும் வழியிலுள்ள ஊர்க்குளத்துக்கு, அவள் தம்பிமாருடைய மனைவியர் இருவரும் தண்ணீர் மொண்டுபோவதற்குச் செப்புக் குடங்களோடு வந்திருந்தனர். அவர்கள் தண்ணீர் மொண்டுகொண்டு குடங்களைத் தூக்கி முழங்காலின்மேல் நிறுத்தி, தலையின்மேல் வைக்கப்போகிற சமயத்தில், அவர்களில் இளையாள், தாமரைநாச்சி தூரத்தில் வருதலைக் கண்டு, 'அக்கா, அங்கே வருபவள் யார்?' என்றாள். மூத்தவள், அவ்வழியே உற்று நோக்கி, 'அடி, வந்தது கேடு. அவள்தான் நமது நாத்தி தாமரைநாச்சி' என்றாள். 'யார்! அந்த மலட்டு முண்டையா?' என்றாள் இளையாள். 'ஆமாமடி. இந்த நாசமாய்ப்போன மலட்டுமுண்டை இங்கே ஏன் வருகிறாள்? அவளுடைய மலட்டுப் பிணி நம் மக்கள்மேற் சாடும், மனைமேற் சாடும். இவளை நமது வீட்டிற்கு வரவொட்டாமற் செய்யவேண்டுமடி' என்றாள் மூத்தாள். 'ஆம், அக்கா, தம்பிமார்கள் தமக்கையை வேண்டாம் என்பார்களோ?' என்றாள் இளையாள். 'ஆமடி, அவர்களுக்கும் போதித்து இவளை அண்டவொட்டாமற் செய்யவேண்டும்' என்றாள் மூத்தாள்.

பின்பு இருவரும் கூடிப்பேசி, தத்தம் குடத்தைப் படிக்கல்லின்மேற் போட்டுடைத்து, கைவளையல்களை ஒடித்து, ஒடிந்த வளையல்களினால் தம்முடம்பைக் கீறி, கீறு காயங்களை உண்டாக்கி, மயிரை விரித்துவிட்டு, குய்யோ முறையோ என்றழுதுகொண்டு விரைவாக நடந்து அரண்மனை சேர்ந்தனர்.

மேன்மாடியிலிருந்த அவர் கணவர்கள் அழுகுரலைக் கேட்டுக் கீழே இறங்கி யோடிவந்து, மனைவியர்களின் கோலத்தைக்கண்டு மிகப்பதைப்புற்று, அவர்களுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, 'அழாதீர்கள். உங்களை யிவ்வாறு செய்தவர் யார்? சொல்லுங்கள். இப்பொழுதே அவர்களைத் தகுந்தபடி தண்டிக்கிறோம்' என்றார்கள். மனைவியர்கள், 'எங்களை இந்தக்கோலஞ் செய்தவள் அவள்தான் உங்கள் அக்காள், தாமரை; தண்ணீர்க்குப் போயிருந்த எங்களைக் குளக்கரையில் மறித்து, குடங்களைப் பிடுங்கி யுடைத்து, எங்களைக் கீழே தள்ளிப் புரட்டிஉதைத்தாள். நீங்கள் அவளுக்குக் கலியாணம் பண்ணி ஒன்றுங்கொடாமல் வீட்டைவிட்டுத் துரத்தினீர்களாம். இப்பொழுது அவள் மிகப் பெரிய பணக்காரியாம். பழிவாங்க வந்திருக்கிறாள். அவள் காயாமலடி கருமலடி; இந்தவீட்டில் அவள் காலெடுத்து வைத்தால், மலட்டுப்பிணி மனைமேற் சாடும்; மக்கள்மேற் சாடும்; உங்கள்மேற் சாடும். நாங்கள் அடிப்பட்டாலும் பெரிதல்ல. எங்கள் மக்கள் பிழைத்தாற் போதும். நாங்கள் இனி ஒரு நொடிப்பொழுதுகூட இங்கே இருக்கமாட்டோம். எங்களை எங்கள் தாய் வீட்டுக்கு உடனே அனுப்புங்கள்' என்று சொல்லித் தலைதலையாய் அடித்துக்கொண்டு, கணவர்கள் இரந்து தேற்றியும் தேறாமல் ஓலமிட்டார்கள்.

சகோதரர்களில் மூத்தவன், 'இதென்ன சங்கடம்? பலநாள் விட்டுப்பிரிந்த அக்காள் இன்று வந்தாள்; நாம் அவளை வரவேற்று உபசரிக்காவிடில் ஊரார் ஏசுவாரே!' என்றான். அதற்குத் தம்பி, 'ஆம், அண்ணா, வந்தவள் ஒழுங்காக வீட்டிற்கு வாராமல் குளக்கரையில் பெண்டிரைப் பிடித்து அடித்துக் கலகம் செய்தாளே. மனைவியர்களும் தாய்வீடு போகவேண்டும் என்று ஒரேகாலில் நிற்கிறார்கள். இதற்கென்ன செய்வது? மேலும், அவள் மலடியாயிருப்பதால் மலட்டுப் பிணி மனைமேற் சாடும், மக்கள்மேற் சாடும். தமக்கையின்பொருட்டு நாம் மனைவிமக்களை இழக்கவேண்டுமா?' என்றான்.

பின்பு சகோதரர்கள் இன்னது செய்வதென்றறியாமல் மனைவியர்களை நோக்கி, "இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறீர்கள்?' என்றார்கள். மனைவியர்கள்; 'அவளை வீட்டிற்குள் கால்வைக்க விடமாட்டோம், விட்டால், எல்லோரும் இறப்பது நிச்சயம். நீங்கள் பேசாமல் மாடிக்குப் போய்க் கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள். மற்றக் காரியங்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்றார்கள். மனைவியர் சொற்படியே கணவர்கள் மேன்மாடிக்குப் போய்க் கதவை யடைத்துக்கொண்டார்கள்.

பின்பு மனைவியர்கள் இரண்டு சேவகர்களைக் கூப்பிட்டுப் பள்ளியிற் படிக்கும் தம் மக்களைக் கையோடு

விரைவாக அழைத்துவருமாறு உத்தரவிட்டார்கள்; மக்கள் வந்தவுடன் அவர்களை உள்ளே அனுப்பிவிட்டு, சேவகர்களை நோக்கி, தாமரையை இவ் வீட்டிற்குள் நுழைய விடாதீர்கள்; விட்டீர்களேயானால் உங்கள் தலைகள் போய்விடும் என்பதை நன்றாய் உணருங்கள். அவள் வந்து கேட்டால் கவுண்டர்கள் வேட்டைக்குப் போயிருக்கிறார்களென்றும், நாங்கள் மக்களோடு தாய் வீட்டுக்குப் போயிருக்கிறோம் என்றும் சொல்லுங்கள். அவள் வம்புசெய்து கதவைத்திறந்தால் அவளைக் கட்டித் தள்ளி உதையுங்கள்' என்று கட்டளைசெய்து, உள்ளே சென்று கதவுக்கு இரட்டைத் தாழிட்டு, மலட்டுப்பிணி மக்கள்மேற் சாடுமென்றஞ்சி மக்களை வட்டமாய் உட்காரவைத்து, ஒரு பெரிய கூடை (மக்கிரி)யை எடுத்து அவர்கள்மீது கவிழ்த்து, பக்கத்திற் கிடந்த ராகிநெரிக்கும் கல்லைத் தூக்கிப் பாரம்வைத்துவிட்டு, 'இனி யவள் செய்வதைச் செய்யட்டும்' என்று சொல்லிச் சிறிது விலகியுட்கார்ந்தார்கள்.

இதற்குள், தம்பியர்மக்களை வாரியெடுத்து முத்தமிடவேண்டும் என்ற ஆசை யிழுக்க விரைந்துவந்த தாமரை அரண்மனைவாசலை நெருங்கி, அதன் கதவு மூடியிருத்தலைக்கண்டு, பக்கத்தில் நின்ற சேவகர்களை நோக்கி, 'சேவகர்களே, குழந்தைகள் எங்கே? என் தம்பிமார் எங்கே? அவர்களுடைய மனைவியர் எங்கே? வீட்டுக்கதவு ஏன்மூடியிருக்கிறது? என்றுகேட்டாள். சேவகர்கள், 'அம்மா, எசமானர்கள் வேட்டையாடப் போயிருக்கிறார்கள். எசமானிகள் மக்களோடு தாய் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள்' என்றார்கள். அது கேட்டுத் தாமரை, 'ஏனப்பா, பொய் சொல்லுகிறீர்கள்? வழியில் விசாரித்தபொழுது, தம்பிமார்கள் சௌக்கியமாய் அரண்மனையில் இருக்கிறார்களென்றும், அவர்களுடைய மனைவியர்கள் சிறிது நேரத்துக்கு முன்புதான் குளத்திலிருந்து வந்தார்களென்றும் ஊரார்கள் சொன்னார்களே. கதவைத் திறவுங்கள். நான் உள்ளேபோய்க் குழந்தைகளைப் பார்க்கவேண்டும்' என்றாள்.

'குழந்தைகள்' என்றசொல்லைக் கேட்டுச் சேவகர்கள் ஒருவர்க்கொருவர்கண்ணிமைத்துக்கொண்டு, 'அம்மா, நாங்கள் கதவைத் திறக்கமாட்டோம். எசமானர்கள் வேட்டையாடித் திரும்பிவரும் வரையில் கதவைத் திறக்கக்கூடாது என்று எங்களுக்கு உத்தரவு' என்றார்கள்.

இதற்குள் ஊர்ச்சனங்கள் அங்கேகும்பலாய்க் கூடி தாமரையைச் சார்ந்து சிலரும், தம்பிமார்களைச் சார்ந்து சிலரும் பேசத் தொடங்கினார்கள். அவர்கள் பேசிக்கொண்டதையும் சேவகர்கள் சொன்னதையும் கேட்டுத் தாமரை சினந்து, 'இப்பொழுது கதவைத் திறப்பீர்களா, திறக்கமாட்டீர்களா? என்று சேவகர்களைக் கேட்டாள்.

'நாங்கள் திறக்கமாட்டோம்' என்று சேவகர்கள் எதிர் விளம்பினர்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[174-வது பக்கத் தொடர்ச்சி]

2. அநுமானப் பிரமாணம்.

பஞ்சரூபங்கள்

அந்நுவய வியதிரேகி ஏதுவானது, பஞ்சரூபங்களோடு கூடியே தனது உண்மையை நிலைநிறுத்தக் கூடியதென்றும், அவற்றில் ஒரு ரூபம் குறைந்தாலும் தனது சத்தியத்தைச் சாதிக்கத் தகாதென்றும் தர்க்க நூல் கூறும். அப் பஞ்சரூபங்க ளாவன:—

(1) பக்க தருமத்துவம்
(2) சபக்கத்திற் சத்துவம்
(3) விபக்கத்தில் வியாவிருத்தி
(4) அவாதீத விடயத்துவம்
(5) அசற் பிரதிபக்கம்

என்பனவாம். அவற்றுள்,

(1) பக்க தருமத்துவம் என்பது துணிபொருளுக்கிடமான பக்கம், அல்லது, வாசிரயத்தில் ஏது இருத்தலாகிய தருமத்துவம். இப் பக்கதருமத்துவ முறைபோல் சிவபிரானை, அவர்பால் வயங்கும் சீர் நிலைகளோடு அப்பர் திருப்பழனம் - திருத்தாண்டகத்தில் விளக்குவது காண்க:—

ஏய்ந்த வுமைநங்கை பங்கர் தாமே
யேழுழிக் கப்புறமாய் நின்றார் தாமே
ஆய்ந்து மலர்தூவ நின்றார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
தேய்ந்த பிறைசடைமேல் வைத்தார் தாமே
தீவா யரவதனை யார்த்தார் தாமே
பாய்ந்த படர்கங்கை யேற்றார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே.

திருப்பழனம் - திருத்தாண்டகம் 7.

மற்றும்,

வேட்க ளத்துறை வேதிய னெம்மிறை
யாக்க ளேறுவ ரானஞ்சு மாடுவர்
பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினாற்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே.

திருவேட்களம் - திருக்குறுந்தொகை 3.

என்பதின் 4-ம் அடியை நோக்குக.

(2) சபக்கத்திற் சத்துவம் என்பது, திருஷ்டாந்தஸ்தலத்தில் ஏது இருத்தல். சபக்கம் என்பது உபமானத்திற்குத்தக்கது. சத்துவம் என்றால் நிலைத்திருத்தல் என்னும் கருத்தாம். திருவீழிமிழலையுள் வீற்றிருக்கும் சிவபெருமான் கைலாயத்திலும் ஏனைய சிவஸ்தலங்களினும் காணப்படும் மூர்த்தியாகும் எனத் திருநாவுக்கரசர் திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் ஒன்று பாடியுள்ளார். அதன் முதற் பாசுரமும், திருக்கடைக்காப்பும் அடியில் காணப்படுவனவாம்:—

கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்
கந்தமா தனத்துள்ளார் காளத் தியார்
மயிலாடு துறையுள்ளார் மாகா ளத்தார்
வக்கரையார் சக்கரமாற் கீந்தார் வாய்ந்த

அயில்வாய சூலமுங் காபா லமும்
அமருந் திருக்காத்தா ரானே றேறி
வெயிலாய சோதி விளங்கு நீற்றார்
வீழி மிழலையே மேவி னாரே.

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூ ருள்ளார்
பூவனத்தார் புலிவலத்தார் வலியின் மிக்க
தன்கூர்மை கருதிவரை யெடுக்க லுற்றான்
தலைகளொடு மலைகளன தாளுந் தோளும்
பொன்கூருங் கழலடியோர் விரலா லூன்றிப்
பொருப்பதன்கீழ் நெரித்தருள்செய் புவனநாதர்
மின்கூருஞ் சடைமுடியார் விடையின் பாகர்
வீழி மிழலையே மேவி னாரே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 1& 11

(3) விபக்கத்தில் வியாவிருத்தி—விபக்கம் என்பது சபகத்திற்கு எதிர்மறையாகும்.எனவே சாத்தியத்தின் அபாவமுள்ள இடத்து ஏதுவில்லாதிருத்தல். கொடியவர் மனத்தில் சிவபெருமான் தங்க இடமில்லையென்பது அப்பர் தேவாரத்தில் பற்பல இடங்களிற் காணலாம்:—

மெய்யானைத் தன்பக்கல் விரும்பு வார்க்கு
விரும்பாத வரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைப் புறங்காட்டி லாட லானைப் [பூதிப்
பொன்பொலிந்த சடையானைப் பொடிகொள்
பையானைப் பையரவ மசைத்தான் றன்னைப்
பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனிச்
செய்யானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே.

திருநாகேச்சரம் - திருத்தாண்டகம் 5.

கல்லானை நரைவிடையொன் றூர்தி யானை
நால்வேதத் தாறங்க நணுக மாட்டாச்
சொல்லானைச் சுடர்மூன்று மானான் றன்னைத்
தொண்டாகி பணிவார்கட் கணியான் றன்னை
வில்லானை மெல்லியலோர் பங்கன் றன்னை
மெய்யராய் நினையாதார் வினைக டீர்க்க
கில்லானைக் கீழ்வேளூ ராலுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.

திருக்கீழ்வேளூர் - திருத்தாண்டகம் 5.

(4) அவாதீத விடயத்துவம்:— ஏதுவிற்கு விடயமான சாத்தியதருமம் வேறு எப் பிரமாணத்தாலும் கண்டிக்கப்படாதிருத்தல். புகையுடைமையாகிய ஏதுவிற்கு விடயமான தீயுடைமையாகிய சாத்திய தருமம் வேறெப் பிரமாணத்தாலும் மறுப்புடையதாகாததாயிருத்தலின், இது அவாதீத விடயத்துவமாம். சிவபெருமானது தன்மை மறைகளுக்கும் அதீதமானதால் எவ்வாற்றானும் அதன் சாத்தியதருமம் பிராமணங்களெவற்றினுக்கும் அதீதமானதாய்க் கண்டிக்கலாகாத்தன்மையுடைத்து என்னும் கருத்தமைந்த பாசுரங்கள் அப்பர் தேவாரத்தில் பலவுள:—

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளுங் கடந்த சுடர்ச் சோதிபோலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலும்
கடனஞ்ச முண்டிருந்த கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் டோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் - திருத்தாண்டகம் 7.

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
யந்தியுஞ் சந்தியு மானார் தாமே
சொல்லும் பொருளுமேலா மானார் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லுநெறி காட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுடைய செல்வர் தாமே.

திருவாலங்காடு - திருத்தாண்டகம் 5.

(5) அசற் பிரதிபக்கம்:— சாத்தியா பாவத்தைச் சாதிக்கும் பிரிதோர் ஏது இன்மை. புகையுடைமையாகிய ஏதுவிற்கு விடயமான தீயுடைமையாகிய சாத்தியத்தின் அபாவத்தைச் சாதிக்கும் பிறிதோரேது இன்மையின் இது அசற் பிரதிபக்க மென்னப்படும். சாத்தியபாவத்தைச் சாதிக்கும் பிறிதோரேது பிரதிபக்க மெனப்படும். அதனையுடையது சற்பிரதி பக்கமாகும். அது இல்லாதது அசற்பிரதிபக்கம் (உ - ம்).

ஆலலா லிருக்கையில்லை யருந்தவ முனிவர்க்கன்று
நூலலா னொடிவதில்லை நுண்பொரு ளாய்ந்துகொண்டு
மாலுநான் முகனுங்கூடி மலரடி வணங்கவேலை
யாலலா லமுதமில்லை யையனை யாறனார்க்கே.

திருவையாறு - திருநேரிசை 2.

எனவே பஞ்ச ரூபங்களாக காட்டப்பட்ட பக்கதருமத்துவம், சபகத்தில் சத்துவம், விபக்கத்தில் வியாவிருத்தி, அவாதீதவிடயம், அசற் பிரதிபக்கம், என்பன ஐந்தும் ஒன்றையொன்று அவாவி நிற்றலால் ஏதுவின் நிச்சயம் நிலைபடும். திருநாவுக்கரசர் பாடிய சில பதிகங்களில் இவற்றை முறையே வைத்து முதலைந்தும் ஒரு பஞ்சரூபத் தொடர்பாயும், இரண்டாவதைந்தும்மற்றொரு பஞ்சரூபத் தொடர்பாயும் பாடியிருப்பது காணலாம். அவற்றுள் ஒன்று திருவான்மியூர் திருக்குறுந்தொகை யென்னும் திருப்பதிகம்; இதில், "வண்டுசேர் பொழில் வான்மியூரை", பக்கதருமத்துவமாகவும், "பொருளும், சுற்றமும், பொய்ம்மையும்" விட்டவரிடம் காணப்படுவது சபக்கத்தில் சத்துவமாயும், "மந்தமாகிய சிந்தையும் அதன் மயக்கமும்" விபக்கத்தில் வியாவிருத்தி காட்டவும், "உள்ள முங் கரைந்தேத்த வல்லார்க் கல்லால்" என்பது எப் பிரமாணத்திலும் கண்டிக்கப்படாததின்றித் தலையாய் எடுத்துக் கூறப்பட்டதால் அது அவாதீத விடயமாயும், படங்கொள் பரம்பரைக் கார்த்தலும், மதிசூடலு முதலியன அசற் பிரதிபக்கமாயும் எடுத்தமை முறையே பின்வரும் பாசுரங்களாற் காணலாம்:—

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் றன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே.

பொருளுஞ் சுற்றமும் பொய்மையும் விட்டுநீர்
மருளு மாந்தரை மாற்றி மயக்கறுத்
தருளு மாவல்ல வாதியா பென்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே.

மந்த மாகிய சிந்தை மயக்கறுத்
தந்த மில்குணத் தானை யடைந்துநின்
றெந்தை யீசனென் றேத்திட வல்லிரேல்
வந்து நின்றிடும் வான்மியூ ரீசனே.

உள்ள முங்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ள முள்ள வசிக்கழி வானவன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே.

படங்கொள் பாம்பரைப் பான்மதி சூடியை
வடங்கொள் மென்முலை மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே.

திருவான்மியூர் - திருக்குறுந்தொகை

மற்றும் 6 முதல் 10 வரையிலுமுள்ள பாசுரங்கள் "நெஞ்சி லவரைப்" பக்கமாக வெடுத்துப் பஞ்சரூபங்களில் தத்துவ விளக்கம் காட்டப்பட்டனவாகும். இத்தகைய பதிகங்களை அறிஞர் ஆராய்ந்து தேவாரப்பதிகங்களினின்று வெளியிடல் கருமமாம்.

சமணர்கள் தருக்கத்தில் நிபுணரென்பது யாவரும் அறிந்த விஷயம். தருமசேனரென்னும் பட்டத்துடன் அப்பர் சமணகுருவா யிருந்தாரெனின், அவர் தருக்கத்திற்கு இணை செப்பக் கூடுமோ ? ஆதலால் ஏதுக்கள் காட்டுமிடத்துப் பஞ்சரூபங்கள் வெளியாகுமாறு அவர் பாடுவது வழக்கமாயிற்று.

தமிழ்ப் பாடம் 10.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[171-வது பக்கத் தொடர்ச்சி]

27. இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காத
லற்றது மான மழிந்ததுநாண்—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து. [காமத்

பதப்பிரிவு:—இற்றது நெஞ்சம் எழுந்தது இரும் காதல் அற்றது மானம் அழிந்தது நாண் மற்று இனி உன் வாய் உடையது என்உடைய வாழ்வு என்றான் வெம் காம தீ உடைய நெஞ்சு உடையான் தேர்ந்து.

அன்வயம்:—நெஞ்சம் இற்றது. இரும் காதல் எழுந்தது. மானம் அற்றது. நாண் அழிந்தது. (இவ்வித) வெம் காமத்தீஉடைய நெஞ்சு உடையான் (ஆன நளன்) தேர்ந்து, '(அன்னமே) மற்று இனி என்னுடைய வாழ்வு உன் வாய் உடையது' என்றான்.

பதவுரை.

நெஞ்சம் - (நளனது) மனம்
இற்றது - உடைந்தது. (அதனின்று)
இரும் - பெரிய
காதல் - ஆசை (என்னும் நெருப்பு)
எழுந்தது - மூண்டெழுந்தது (எழவே அவனது)
மானம் - மானமானது
அற்றது - ஒழிந்தது.
நாண் - வெட்கமும்
அழிந்தது - அழிந்துபோயிற்று. (எனவே அந்த)
வெம் - வெப்பமான
காமம் - காமமாகிய
தீ உடைய - நெருப்பை உடைய
நெஞ்சு-மனதை
உடையான் - உடையவனாகிய (நளன்),
தேர்ந்து - காரியம் ஆகும் விதம் இதுவே எனத் தெளிந்து, (அன்னத்தைப் பார்த்து)
மற்று இனி - இதன்மேல்
என்னுடைய - என்னுடைய
வாழ்வு - வாழ்வானது
உன் - உன்னுடைய
வாய் - வாயிலே
உடையது - இருக்கின்றது,
என்றான் - என்று கூறினான்.

கருத்து:—அன்னமே, என்னைத் தமயந்தி மணம் புரியும்படி அவளிடத்தில் நீபோய்ச் சொல்கின்ற திறமையில்தான், நான் இனி வாழ்வதும் ஒழிவதும் பொருந்தி யிருக்கின்றது என்று நளன் கூறினான்.

விரிவுரை:—அன்னம் உரைத்த அம்மொழிகளைக் கேட்ட நளனது மனத்தில், பூகம்பம்போல், ஒரு பெரிய அசைவு உண்டாயிற்று. கம்பித்தநிலம் பிளப்பதுபோல அவன் மனமும் உடனே பிளந்துபோயிற்றும். பிளந்த நிலத்திலிருந்து எரிமலை எழுவதென உடைந்த அவன் மனதினின்று காமத்தீ கிளம்பியது. எழுகின்ற எரிமலை அங்கிலத்தி லிருப்பனவற்றை அழித்துவிடுவதுபோல் நளனது மனத்திற்கு உரிய மானமும் வெட்கமும் அக் காமத்தால் அழிந்துபோயினவாம். இதனால்தான் ஏழுலகும் நின்ற கவிகை நிழல் வேந்தன், ஒரு அன்னத்தைப் பார்த்து, 'என் வாழ்வெல்லாம் இனி உன்வாயிலே இருக்கின்றது' என்று அதனைத் தாழ்ந்து வேண்டும்படி நேர்ந்தது.

இவன் வாழ்வு அன்னத்தின் வாயில் இருப்பது எப்படி எனில், தமயந்தியைப் பாராட்டித் தன்னிடத்தில் சொன்னதைப்போல்வே வஞ்சனையின்றித் தன்னைப் பாராட்டி அவளிடமும் சொல்லவேண்டு மென்பதாம். அன்னம் தன்னிடம்பேசிய உரைகளால் அதற்குச் சொல்வன்மைமிகுதியும் உண்டெனஉணர்ந்ததால் இப்படிச் செப்பினான், என்பதைக் காட்டவே கவி 'தேர்ந்து' என்ற சொல்லை அமைத்திருக்கின்றார்.

குறிப்பு:—1. உன் வாய் உடையது என்று கொள்ளாது, உன்வாய் உடையது என்றெடுத்தாலும் அர்த்தம் தரும். வாய், என்பது பேசுகின்ற வாய் என்னும் உறுப்பைக் குறிக்காமல், இடத்தைக் காட்டி 'என் வாழ்வு உன்னிடத்தில் இருக்கின்றது', என்று அர்த்தமாகும். ஆயினும், இந்தச் சந்தர்ப்பத்தில் முதலில் சொன்ன அர்த்தமே சிறப்புடையது. முன் 4-வது செய்யுளில் (23-வது பக்கம்) காரிகையார்கண்ணே, என்றதில்இதற்கு மாறாகக் கண் என்றதை அங்கு ஓர் உறுப்பாக மாதருடைய கண்கள்என்று கொள்ளாமல் மாதர்களிடத்தில் என்று கொள்ளவேண்டும் எனச்சொல்லியிருப்பதை நினைத்துக்கொள்க.

2. இரும் காதல், என்ற தொடருக்கு மிகுந்த அல்லது பெரிய காதல் என்று அர்த்தம். இருமை + காதல் = இருங்காதல். இருமை, என்றதற்கு மூன்று அர்த்தங்கள் இருக்கின்றன. அதை நன்றாக நினைவில்

வைத்துக்கொள்வது நலம்...(1) இரண்டு, என்கிற அர்த்தம் யாருக்கும் தெரியும். இருகாதும் குளிரப் பேசினான், என்ற உபயோகத்தில் இது இரண்டு என்னும் கணக்கையே காட்டும் (2) கருமை:—இரும் குயில் கூவியது, என்றக்கால், கரிய நிறமுடைய குயில் என்ற பொருள் தரும். இரண்டு குயிலன்று, பெரிய குயிலுமன்று. (3) பெருமை:—இரு ஞாயிறு, என்றால் இரண்டு சூரியன் அல்ல, கரிய சூரியனுமன்று, பெரிய சூரியன். தேவர் அமிழ்து வேண்டி இரும் கடல் கடைந்தனர், என வருமானால், அவர் கடைந்தது வெண்மையான பாற்கடல் ஆதலால், இரும் என்பது இங்குக் கரிய என்ற அர்த்தத்தைக் குறிக்காமல் பெரிய அல்லது விசாலமான என்னும் அர்த்தத்தைக் குறிக்கும்.

---

28. வீமன் றிருமடந்தை மென்மாலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே
ஒடுங்கிடையா டன்பா லுயர்ந்து. [யன்னம்

பதப்பிரிவு:—வீமன் திருமடந்தை மென்மாலை உன் உடைய் வாம நெடும் புயத்தே வைகுவிப்பேன் சேம நெடும் குடையாய் என்று உரைத்து நீங்கியதே அன்னம் ஒடுங்கு இடையாள் தன்பால் உயர்ந்து.

அன்வயம்:—சேம நெடும் குடையாய் "வீமன் திருமடந்தை மென்மாலை உன்னுடைய வாம நெடும் புயத்தே வைகுவிப்பேன்" என்று அன்னம் உரைத்து உயர்ந்து, ஒடுங்கு இடையாள் தன்பால் நீங்கியது. [வாமம் - அழகு. சேமம் - க்ஷேமம், காவல்]

நீங்களே பதவுரை எழுதிப் பார்த்துப் பயின்று கொள்வதற்கு ஏற்றபடி சுலபமான பாட்டு இது. 'உனக்கே தமயந்தி மணமாலை சூட்டும்படி செய்கின்றேன்' என்று அன்னம் அரசனுக்குக் கூறித் தமயந்தியினிடம் போயிற்று என்பது கருத்து.

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொ
லிவ்வளவிற் காத லியம்புங்கொ—லிவ்வளவின்
மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதநின்
றாளுங்கொல் யானை யரசு. 29

பதப்பிரிவு:—இவ் அளவில் செல்லும்கொல் இவ் அளவில் காணும்கொல் இவ் அளவில் காதல் இயம்பும் கொல் இவ் அளவில் மீளும் கொல் என்று உரையா விம்மினான் மு மதம் நின்று ஆளும் கொல் யானை அரசு.

அன்வயம்:— மும்மதம் நின்று கொல்யானை ஆளும் அரசு, இவ் அளவில் செல்லுங்கொல், இவ் அளவில் காணும்கொல், இவ் அளவில் காதல் இயம்பும்கொல், இவ் அளவில் மீளும்கொல், என்று உரையா விம்மினான்.

பதவுரை.

மு மதம் - மூன்று மதங்களும்
நின்று - தங்கியதாய்
கொல் - (கண்டவர்களை) கொல்கின்ற
யானை - யானைகளை
ஆளும் - (அடக்கி) ஆள்கின்ற
அரசு - அரசனாகிய நளன்,
இவ் அளவில் - இதற்குள்
செல்லும் கொல் - (அன்னமானது தமயந்தியினிடத்தில்) போயிருக்குமோ!
இவ் அளவில் - இதற்குள்
காணும்கொல் - (அவளைக்) கண்டிருக்குமோ!
இவ் அளவில் - இப்பொழுது
காதல் - எனது காதலை
இயம்பும்கொல் - (தமயந்திக்கு) சொல்லுமோ !
இவ் அளவில் - இப்பொழுது
மீளும் கொல் - திரும்புமோ !
என்று - என்று
உரையா - சொல்லி
விம்மினான் - விம்மினான்.

கருத்து:—'உன்னைத் தமயந்தி விவாகம் செய்துகொள்ளும்படி செய்கின்றேன்' என்றுசொல்லி அன்னம் போனதுமுதல், நளன் பொறுமையற்றவனாய் நிமிஷம் நிமிஷமாக எண்ணிக் கணக்கிட்டு இன்னும் அது திரும்பவில்லையே என்று பன்னிப்பன்னி ஏங்கினான்.

விரிவுரை:—மதங்கொண்ட யானைகளையும் தன் தோள்வலியால் எளிதில் அடக்கி ஆளும் வல்லமையுடையவனாயிருந்தும், தன் மனதைச் சிறிதுநேரம் அடக்கிவைக்க இவனால் இயலவில்லையே, காதலுற்றவர் பேதைமை பெரிது! எனச் சிரிப்பவர்போல் கவி, மும்மதம் நின்றாளும் கொல்யானை அரசனிவன், என்று அவனைக் குறிக்கின்றார்.

குறிப்பு:—1. நாலாவது அடியில்வரும் கொல்யானை, என்ற தொடரிலுள்ள கொல் ஒன்றுதான் இந்தச் செய்யுளில் கொலைசெய்கின்ற தொழிலைக் காட்டுகின்றது. மற்ற அடிகளில் வந்த, செல்லுங்கொல் போன்ற சொற்களிலுள்ள கோல் என்பவை, ஓ என்பதிற்குப் பதிலாய் வினா (அல்லது கேள்வியை) குறிக்கின்றது. செல்லுமோ என்றாலும் செல்லுங்கொல் என்றாலும் அர்த்தம் ஒன்றேதான். நீ நாளை வருவாயோ, எனக் கேட்பதற்குப் பதிலாய் நீ நாளை வருவாய்கொல், என்றும் கேட்கலாம். என்கொல் இது, என்றால், என்ன இது என்று கேட்பதற்குச் சமானம்.

2. உரையா விம்மினான், என்பதிலுள்ள உரையா, வினையெச்சம். (இந்த உருவத்தில் வருகின்ற சொற்களின் இலக்கணத்தை முன் 7-வது செய்யுளிற்கு அடியில், 46-வது பக்கத்தில் விரிவாகச் சொல்லியிருக்கின்றேன்). உரையா விம்மினான், என்றால் உரைத்து விம்மினான், என்றும் கொள்ளலாம் ; அல்லது உரையாமல் விம்மினான், என்றும் கொள்ளலாம். இந்த எதிர்மறைப்பொருளும் சந்தர்ப்பத்திற்கு இணங்கியே இருக்கின்றது. அன்னம் போயிருக்குமோ, காதலைச் சொல்லி யிருக்குமோ, இவ்வளவில் மீண்டு வருமோ, என்று நினைத்து நினைத்து வாயாலொன்றும் சொல்ல மாட்டாது விம்மிக்கொண்டிருந்தான் என்பதும் இயற்கையே.

சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யழிந்திட்டான்—பூவி
னிடையன்னஞ் செங்கா லிளவன்னஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து. 30

பதப்பிரிவு:—சேவல் குயில் பெடைக்கு பேசும் சிறு குரல் கேட்டு ஆவி உருகி அழிந்திட்டான்—பூவின் இடை அன்னம் செம் கால் இள அன்னம் சொன்ன நடை அன்னம் தன்பால் நயந்து.

அன்வயம்:— பூவின் இடைஅன்னம், செம்கால் இளஅன்னம், சொன்ன நடை அன்னம்தன்பால் நயந்து, சேவல் குயில்பெடைக்குப் பேசும் சிறுகுரல் கேட்டு ஆவி உருகி அழிந்திட்டான்.

கருத்து:—அச்சோலையில் ஆண்குயில் தன் பெண் குயிலோடு மெல்லிய குரலால் பேசுவதைக்கேட்டு நளன், அன்னவாறே உரையாடத் தனதருகு தமயந்தியில்லையே என்று பொறுமைகொண்டு வாட்டமடைந்தான்.

பதவுரை.

பூவின் - தாமரைமலரின்
இடை - நடுவிலே (வசிக்கும்)
அன்னம் - அந்த அன்னப் பறவையானது
செம் - சிவந்த
கால் - கால்களையுடைய
இள - இளமை பொருந்திய
அன்னம் - அந்த அன்னப்பறவையானது
சொன்ன - வருணித்த
நடை - நடையிலே [னிடத்தில்
அன்னம்தன்பால் - அன்னம்போன்ற தமயந்தியி
நயந்து - விருப்பம் மிகுந்து, (நளன்)
சேவல் - ஆண்குயில்
குயில் பெடைக்கு - பெண் குயிலோடு
பேசும் - பேசின
சிறு - மெல்லிய
குரல் - குரலை
கேட்டு - காதிற் கேட்டு
ஆவி - (தனது) உயிர்
உருகி - கரைந்து
அழிந்திட்டான் - வாட்டமடைந்தான்.

விளக்கம்:—அழிந்திட்டான் - அழிந்தான்-வாட்டமெய்தினான். (பயனிலை). யார் அழிந்திட்டான்? நளன், தோன்றா எழுவாய். எப்படி அழிந்திட்டான்? உருகி - கரைந்து. எது உருகி? ஆவி உருகி - உயிர் கரைந்து. ஏன் ஆவி உருகி அழிந்தான்? கேட்டு - கேட்டதால். எதைக்கேட்டு? குரல் கேட்டு. எப்படிப் பட்ட குரல் கேட்டு? சிறு குரல் கேட்டு. எந்தச் சிறு குரல் கேட்டு? பேசும் சிறுகுரலைக் கேட்டு. எது பேசும் சிறு குரலைக் கேட்டு ஆவி உருகி அழிந்திட்டான்? சேவல் - ஆண்பறவை. சேவல் எதனோடு பேசும் சிறு குரல்? குயில் பெடைக்கு - பெண்குயிலோடு. சேவல் குயில்பெடைக்குப் பேசினால் அதைக்கேட்ட நளன் ஆவி கரைந்து அழிவானேன்? நயந்து - நயந்ததால் - விருப்பம்கொண்ட காரணத்தால். யார்பால் நயந்து? அன்னம்தன்பால் நயந்து - அன்னத்தைப் போன்ற தமயந்தியினிடத்தில் விருப்பம் கொண்டு. எதனில் அன்னத்தை போன்றவளிடத்தில் நயந்து? நடைஅன்னம்தன்பால் - நடையினில் அன்னம் போன்றவளிடத்தில். யார் இவள்? சொன்ன நடை அன்னம் - சொல்லிய நடை அன்னம். எது சொல்லிய நடை அன்னம்? அன்னம் சொன்ன நடை அன்னம் - அன்னப்பறவை சொல்லிய அன்னம் போன்ற நடையினள். சொன்ன அன்னம் எப்படிப்பட்டது? இள அன்னம். இன்னும் எப்படிப்பட்டது? செம்கால் இள அன்னன் - சிவந்த கால்களையுடைய இளமை பொருந்திய அன்னம். அன்னம் எங்கே வசிப்பது? பூவின் இடை அன்னம் - தாமரைப்பூவிற்கு நடுவிலே வசிக்கின்ற அன்னம். பூவினிடை யன்னம், செங்கால் இள அன்னம்,என்னும் இவ்விரண்டும் அவ்வொருஅன்னப் பறவையையே குறிக்கின்றன.

விரிவுரை:—உலகெலாம் காத்தளித்து உற்றபகை அறவே அடக்கவல்லமன்னவன் குயிலொன்று கூவக் கேட்டுப் பொறுமை யடைந்தானென்றால் காமம் செய்கின்ற காரியம் எத்தகையது என்பது தெரியவருகின்றது. பின்வரும் மூன்று வெண்பாக்களும் நளனது இம் மனநிலையையே விளக்கிக் கூறுகின்றன. அச்செய்யுள்களை மாத்திரம் எழுதுவோம்.

31. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயிற் றோகை விரித்தாட—முன்னதனைக்
கண்டாற்றா துள்ளங் கலங்கினான் காமநோய்
கொண்டார்க்கிஃ தன்றோ குணம்.

32. வாரணியுங் கொங்கை மடவாணுடங் கிடைக்
பேருவமை யாகப் பிறந்துடையீர்—வாரீர் [குப்
கொடியா ரெனச்செங்கை கூப்பினா னெஞ்சந்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து. [கரும்பால்

33. கொங்கையிள நீராற் குளிர்ந்தவிளஞ் சொற்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தின் - மங்கை
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனோ [நறுங்
வெய்தாமக் காம விடாய்.

நளன் இங்கு இவ்வாறு காமநோய் அடைந்து வருந்தியிருக்கத் தூதுசென்ற அன்னம் விதர்ப்பநாடடைந்து தமயந்தியைக் கண்டசெய்தி அடுத்தபாட்டில் ஆரம்பமாகின்றது.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்

[2-வது வால்யூம், 996-வது பக்கத் தொடர்ச்சி]

சூதுபோர்ச் சருக்கம்

தம்பியர் சமைத்த கூடத்தின் பேரழகு கண்டு, தன்னையுங்கண்டு போம்படி பாண்டவரை அத்தினபுரிக் கழைத்துவரத் திருதராட்டிரனா லேவப்பட்ட விதுரனும் அக் கண்ணிலான் தந்த ஓலையொன்றை யேந்தி இந்திரப்பிரத்தநகரி னருகுற்றான். உற்றவன் கண்முன், பாரினுக் குபிரேபோன்ற பாண்டவர் நகரும் தோன்றிற்று.

புரியு மொண்கதிர் கவினுறு
பொலிவினாற் பொன்னுல காமென்ன
வரிய பைம்பொனின் மணிகளி
னிறைந்தசீ ரளகைமா நகரென்ன
தெரியு மன்புட னறங்குடி
யிருப்பதோர் தெய்வவான் பதியென்ன
விரியும் வெண்கொடிப் புரிசைசூழ்
வளநகர் விழிகளித் திடக்கண்டான்

[அந்நகரிலுள்ள மாடமாளிகை கூடகோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள பலவகைப் பொன்மணிகளிலிருந்து வீசுகின்ற ஒள்ளிய கிரணங்கள் பிரகாசிக்கின்ற அழகினால் இந்திரனது சுவர்க்கலோகம் போலவும், தேடி அடைதற் கருமையான பசும்பொன்னும் இரத்தினங்களுங்கொண்டு செல்வம் நிறைந்திருத்தலால் குபேரனது அளகாபுரியைப் போலவும், பாவருக்கும் வெளிப்படையாய், விளங்கத் தெரிகிற அன்புடனே ஓர் தரும தேவதை குடியிருக்கின்ற சிறந்ததொரு தெய்வநகர் போலவும் தோற்றி, பரந்து அசையும் வெண் கொடிகள் நிறைந்த மதிள்களாற் சூழப்பட்ட செழுமையை யுடைய நகரத்தை விதுரன் தன் கண்கள் களித்திடக் கண்டான்.]

சென்னையை யடுத்துள்ள ஊர்களிற் சென்று, நிலவற்ற நள்ளிரவில் வானத்தை யண்ணாந்து நோக்கில், ஆங்குக் கானகமொன்று எரியுண்டதெனப் பேரொளிப் பொலிவு காணப்படும். அது யாதென ஊரிலுள்ளாரை வினவில், அதுதான் சென்னைமா நகரினின்று விசும்பிற் பரவும் மின்சார வொளியெனப் பகர்வார். இந்திரப்பிரத்த நகரிலும், பொன்னாற் சமைத்து மணியாலிழைத்த, மதிள் கோபுரம் எழுநிலைமாடம் முதலியவைகளினின்று வீசியெழுந்த பேரொளியும், சேய்மைக்கண்ணே விதுரன் கண்களிற்பட்டது. இரவிலே மிளிரும் சென்னைமாநகரின் ஒளிக்கற்றை போலன்றி, அச்சுடர் நண்பகலிலும் கதிரவனொளியை எதிரிட்டுக் கண்டவர்தம் கண்களிற் றைத்தது. இதுபோன்ற சுடர் மண்ணுலகில் இதற்குமுன் எங்குங்காணப்படாததாலும், அது இவ்வாறிருந்ததென விரித்துரைத்தற்கு நிலவுலகில் உவமையொன்று இல்லாததாலும், மனப்பான்மைக்கும் மொழிக்கு மெட்டாத விண்ணுலகின் பொலிவு உவமையாகக் கூறப்பட்டது. இனி, முதலடியை, 'புரியுமொண் கதிரும், கவினும், உறுபொலிவினாற் பொன்னுலகு' எனப் பதங்களைப் பிரித்து, வீசி ஜுவலிக்கின்ற ஒளியும் அழகும்நிறைந்த பிரகாசத்தையுடைமையால் பொன்னுலகு போன்றிருந்தது என்று பொருள்கொள்ளினும் அமையும். காலினும் கலத்தினும் தந்த பல விலையுயர் பொருள்கள் மலிந்து கிடத்தலின், அந் நகர் அளகாபுரி போன்றிருந்தது. தாங்களறியாததும் இயற்கையிலில்லாததுமான பொருள்களைச் சிறந்த உவமைகளா யெடுத்துக் கூறுவது இந்திய நாட்டின் கவிமரபு. தருமர் தன்னைச் சேர்ந்தாருக்கும் பிறருக்கும் வேறுபாடின்றியும், ஒருதலைக்கண்ணோட்ட மின்றியும் நீதிசெலுத்திவந்தசெம்மை அறக்கடவுளே கோயில்கொண்டு அவ்வூரிற் றங்கியிருந்தது போன்றது. அரசர் தன்னுயிர்போல் மன்னுயிரைப் போற்றியது, அவ்வூரிலுறைந்த தாழ்ந்த குடிகட்கும் வெளிப்படையாய்த் தோன்றியபடியால் அவ் அன்பும் 'தெரியும்' அன்பென விவரிக்கப்பட்டது. ஆட்சியின் சிறப்பை நெஞ்சத்தேயன்றி வாயாரவும் வெளிப்படையாயும் எவரும் துதித்து, அதை அனைவரும் தெரியக் கண்டிருந்தனர். அன்றி, அறமென்பதொன்று தெரியு மன்புட னவ்வூர் உறைந்தது என்னலுமாம். குடிமக்கள் கவலையற்றுக் களிப்படைந்தவராய் யாவரிடத்தும் அன்புகாட்டி, விருந்தினரை முகந்திரிந்து நோக்காது, அயலாரிடத்தும் கருணைபூண்டொழுகலானும் அன்பின் மிகுதி தெரிந்தது. நீதி தவறாத நெறிமுறையை வெண்கொடி விளக்குகின்றது. எக்காலத்தும் எந்நாட்டிலும் வெண்மை களங்கமின்மைக் கறிகுறி. தருமபுத்திரரது அரசாட்சி தூயதன்மையை நனிமிக உடையதெனப் பலரு மறியும்வண்ணம் காட்டிப்பரந்த வெண்கொடியைக் கண்ட விதுரனுக்கு விழிவழி யுடம்பும் பூரித்தது. திருதராட்டிரன் சூதுக்குத் தான் உதவியாய் நிற்பது விதுரன் மனதிற்கேற்கவில்லை. ஆதலால் சீலத்தாலும், அறிவாலும், சீரிய நடையாலும் சிறந்தவப் பாண்டவபுத்திரரைத் துரியோதனனுள்ளிட்டார் வஞ்சனைகளால் வெல்லநினைக்குமது கைகூடாதென்றும், அவ்வாறு வெல்லாவண்ணம் அவ்வூரிற் பலருமறியத் தாண்டவமாடும் அறந்தானே தடுத்துநிற்குமென்றும், விதுரன் எண்ணிக் களித்தனன். இதுமுதல் நான்கு கவிகளில் இந்திரப்பிரத்த நகரின் வருணனை யடங்கியுள்ளது. இது தொடங்கித் தொண்ணூற்றெட்டாம் பாடல்வரை முப்பத்தேழு செய்யுட்கள் முதற்சீர் மாச்சீராயும், இறுதிச்சீர் காய்ச்சீராயும், மற்றைய சீர்கள் விளச்சீர்களாயும் அமையப்பெற்ற அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியங்களாம். இரண்டாமடியில் 'அரிய பைம்பொனின் பணிகளின் நிறைந்த சீரளகை' என்னும் பாடத்திற்கு, மாற்றும் மதிப்பும் உயர்ந்த பசும்பொன்னினாலாய வேலைப்பாடுக ளமையப்பெற்ற அளகைமா நகரென்னும்படியும்' என்ற பொருள் கொள்க. அந்நகரொன்றிற்குப் பற்பல பொருள்களை உவமையாகக் காட்டிய பல்பொருளுவமையணி நோக்கத்தகுந்தது.

ஊடெ லாநறும் பொய்கைநீள்
வாவியி னுடம்பெலா மலர்பூவின்
றேடெ லாமெழு சுரும்பின
மதுகரச் சொல்லெலாஞ் செழுங்கீதம்
பாடெ லாமிளஞ் சோலைமென்
பொங்கரின் பனையெலாங் குயிலோசை
நாடெ லாநெடும் புனல்வயல்
கழனியி னடுவெலாம் விளைசெந்நெல்.

[அவ் வூரின் உள்ளிடங்களி லெல்லாம் நறுமணம் வீசும் குளங்களும், நீண்ட அக்குளங்களின் அகத்தெலாம் மலரும், அப் பூவின் இதழ்களிலெல்லாம் மொய்த்தெழுகின்ற வண்டுகளின் கூட்டமும், வண்டுகளின் ரீங்காரமெல்லாம் இன்னிசைப் பாட்டுக்களாயும், பொய்கைகளின் பக்கங்களிலெல்லாம் இளமரச் சோலைகளும், மென்மையான சோலையில் உள்ள மரக்கிளைகளிலெல்லாம் குயிலினோசையும், அவ்வூர் முழுவதும் நிறைந்த நீருடைய வயல்களும், கழனிகளினிடையே செந்நெலும் இருந்தன]

நகரச்சிறப்பைக் கூறுமிச் செய்யுள், புதுவது புனைந்த உவமைகள் பெறுவிடினும், சொல்லழகு கொண்டு வன்மையுடன் யாக்கப்பட்டுள்ளது. பொய்கையும், பொய்கையில் மலரும் சுரும்பும், சுரும்பின் சும்மையில் இன்னிசையும், பொய்கையின் பாங்கர்ச் சோலையும், அச்சோலையில் குயிலின் குரலும், ஊரெங்கும் நீரறு வயலும், வயலில் விளையும் செந்நெலும் கோவையா யமைக்கப்பெற்று, முதலில்சொல்லிய பொருளுக்குப்பின் அப்பொருளின்கண்உள்ள சிறப்பும் எடுத்துக்காட்டப்பட்டது ஒற்றைமணிமாலை யென்னும் அணி. இந்தியநாடு வெப்பமுடையது. கடற்கரையோரங்களிலிருக்கும் பட்டினங்களிலேயே கோடைக் காலத்தில் வெப்பம் தாங்கக் கூடுவதில்லை. உள்நாடுகளில் அதன் கொடுமை பன்மடங்கு அதிக மாதலால், அதைத் தணிப்பதற்குப் பல பொய்கைகள் நாட்டில் ஏற்படுத்தப்பட்டன. அப்பொய்கைகள் பாசி படர்ந்து கேடுறாதபடியும், நகர மாந்தர்களின் உபயோகத்தால் மாசடையா வண்ணமும் பல பூக்கொடிகள் அதிலுண்டாக்கப்பட்டன. நிலத்தின் செழுமையினால் இயற்கையிலேயும் அவை முளைத்திருக்கக்கூடும்.

பூக்களின் நடுவேயுள்ள சிறு குமிழொன்றின் வழியாய் வண்டுகள் தேனையுறிஞ்சும். அத்தேன் ஒவ்வொரு மலரிலும் மிகச் சிறிய துளியே கிட்டுவதால் வண்டுகள் மலருக்குமலர் தாவித்தாவிப்போவது வழக்கம். ஆனால் இந்திரப்பிரத்த நகரின் செழுமையினால், மலர்களிற் றேன்நிறைந்து கிடத்தலாலே, சுரும்புகள் தொட்ட மலரை விட்டு நீங்குவதில்லை. அதோடு, நடுக்குமிழ்களிலே யன்றி இதழ்களிலும் தேன் வழிந்து இருத்தலால் வண்டுகள் இதழ்களிலும் மொய்த்திருந்தன. மதுகரச்சொல்லென்னு மிடத்து ஒருமுரண்பாடு தோன்றக் கிடக்கின்றது.. வண்டுகள் பறத்தலால் உண்டாகின்றஒலி வாயின்மேலேற்றிச் சொல்லப்பட்டது. வண்டுகள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும்பேச்சுப் பிறருக்கு இனிய கீதமாய் ஒலிக்கின்றதென்பது கவிக்கூற்று. நகர்ப்புறங்களில் இயற்கையில் வளர்ந்து முதிர்ந்திருந்த உயர் மரங்கள் நீங்கலாக ஊரினுள்ளும் அவரவர் இல்லங்களைச் சுற்றியும் குளிர்ந்தகாற்றிற்காகவும் நிழலுக்காகவும் நடப்பட்ட மரங்கள் சிறுக வளர்ந்து ஊர்ப்பக்கங்களி லெல்லாம் இளஞ் சோலைகளாய்த் தழைத்திருந்தன. நமது சென்னைமாநகரில் கேட்கப்படுவது காக்கையின் குரலே; அறங்குடியிருந்த அப்பதியில் கேட்கப்பட்டன சுரும்பினோசையும், குயிலினின்னிசையு மாம்.

இவ்வா றமைக்கப்பட்ட மாளிகைகட் கருகே அழகிய மண்டபங்களும், நாடக அரங்குகளும், அமைக்கப் பட்டிருந்தன. அந் நாடகமேடையி லாடும் மகளிரது சிலம்பொலி, அவ்வூர்க்குடிகள் அச்சங் கவலை நீங்கியவராய்க் களியாட்டத்திற் கருத்தைச்செலுத்தியிருந்தனரென அறிவித்தது. கழனிகளில் வளர்ந்த குருகுகள் ஊடியும் கூடியும் இன்புற்றது, மனிதர்தம் போக்கைத் தழுவியே போலும். மக்கள் நீராடியதால் நறுமணங்கமழும் நீர்த்துறைகளில் இயற்கையிலும் செயற்கையாலும் கொழிக்கப்பட்டிருந்த முத்துக்கள் நிலாவெள்ளம் போன்றன. நதிகளிலிருந்த நீரெல்லாம் அருந்துதற்கு விளக்கமானவை; அந்நீரிற் படர்ந்தது தாமரைக் காடு.

ஆன கம்பல முழங்கவந்
தெதிர்பணிந் தாதுலர்க் கமுதன்ன
போன கம்பரிந் திடுநெடுஞ்
சாலையே புகுந்தமா மறுகெல்லாம்
வான கந்தனை யொக்குமென்
றும்பரு மண்ணின்மேல் வரவெண்ணு
ஞான கஞ்சுக னகரியை
யெங்ஙனே நாம்வியப் பதுமன்னே.

[விதுரன் புகுந்த பெரிய வீதிகளிலெல்லாம், குடிமக்கள் விருந்தினரை முரசங்கள் பற்பலமுழங்க வந்து எதிர்கொண்டு அவ்விருந்தினருக்கு அமிர்தம்போன்ற உணவைப் பரிவுடன் வருந்தி யுண்பிக்கும் உணவுச் சாலைகள் பற்பல விருந்தன; (செல்வத்தாலும், அறத்தாலும், வளத்தாலும் தரும இன்பத்தாலும்) தேவலோகத்தை யொக்குமென்றெண்ணித் தேவரும் மண்ணிலிழிந்து இந் நகரில் உறைய வெண்ணும் ஞானக்கவசந் தரித்த தருமபுத்திரனது நகரத்தை யெவ்வாறு நாம் புகழ்வது ?]

188958
சென்னை 600 008

'அன்பினோ டளித்திடாத அசனமென்ன அசனமோ' என்றுணர்ந்து விருந்தினர் மனங்குழையா வண்ணம் அவரைப் பல்லிய முழங்க அழைத்து வரவேற்று, வேற்றாரென்று அவர் வெருவாவிதம் உபசரித்து, அச்சத்தாலோ வெட்கத்தாலோ வயிறார உண்ணத் தயங்குமவரைப் பரிவுடன்வேண்டி வருந்தியுண்பித்தனர் அரசனதாணையை மேற்கொண்ட அக் குடிகள். அவ்வாறு உண்பித்தற்கு அமைக்கப்பட்ட உணவுச்சாலைகள் எண்ணிறந்தன; அவை வீதியில் நெடுகஏற்பட்டிருந்தன. 'தெரியுமன்புடன் அறங்குடி யிருப்பதோர் தெய்வவான் பதி' யது வாதலால் குடிகளும் இயற்கை அன்பின் மிகுதியினால் தலையாய தருமமென்றெண்ணி மேற்கொண்டது விருந்தோம்பலே. யுதிஷ்டிரனது வள்ளன்மை இத்தன்மைத்தென்ன அறிந்துள வறிஞரும், திரள்திரளாக அப்பதியின்கண் கூடவே, சாலைகள் சில்லைச் சிறு குடில்களா யமைக்கப்படாமல், மன்பதையர் பலரை ஒருங்கே வரவேற்கும்படி நெடுஞ் சாலைகளா யமைக்கப்பட்டிருந்தன். அச்சாலைகளி லளிக்கப்பட்ட உணவும் அமிழ்தம் போன்றதால் விண்ணினர் மண்ணினிலிழிய வெண்ணினர். அவ்வாறு நிலவுலகத்திற் றங்கவரும்உம்பருக்கு உபசரிப்பவன், அவரறிவிற்குப் பின்னிடாத ஞானப்போர்வை யணிந்தவன்.

விதுரனுக்கு முன்னோடிகள் சென்று, அப்புனிதனது வரவுரைத்தலும், தருமரும் இளைஞரும் அவனை யெதிர்கொண்டு, உள்ளன்பொடு தொழுது நின்றனர். அவர்களைக் கையாரத் தழுவிய களிப்பினா லவன்மெய்யும் குளிர்ந்தது. பாண்டவரும் சிற்றப்பனைச் சிறந்ததொரு கோயிலிற் கொண்டு சேர்த்து மலரடி தொழுதலும், சிந்தையி லன்புகூர்ந் தவனும் அவர்களை ஆசனங்களி லமர விடைதந்தான்.

தானு மைந்தரோ ரைவரு
மொருபுடை தனித்திருந் துழிவண்டு
தேனு கர்ந்திசை முரல்பசுந்
தொடையலான் றிருத்தக மொழிகின்றான்
கோனு வன்றதன் றிருமுக
மெழுதிநீ கொணர்கமைந் தரையென்ன
யானும் வந்தன னேவலா
லழைத்ததற் கேதுவு முளதன்றே.

[விதுரன்தானும், பாண்டவ ரைவரும் ஒரு புறம் தனிமையாக இருந்தபோது, தேனையுண்டு இசைபாடும் வண்டுகள்பல மொய்க்கும் பசுமையான மாலைகளை யணிந்த விதுரன் திருத்தமாகச் சிலவார்த்தைகள் சொல்லலுற்றான்; அரசனாகிய திருதராட்டிரன் சொல்லி ஓலையை எழுதி, நீ என் மைந்தரைக் கொணர்கவென்று பணித்திட, நானும் அவனுடைய ஆணைப்படி வந்தேன்: அவன் அழைத்ததற்கு ஒரு காரணமும் உண்டு]

மிகச் சாதாரணமாய்த் தோன்றும் எளிய நடையுடையிச் செய்யுள் கவியின் மேன்மையைத் தெரிவிக்கும். வில்லி தான் நாடக்கவி யென்பதை இச் செய்யுளால்நிரூபிக்கிறார். சிறந்த ஒழுக்கமும், நீதியின் கடப்பாடு முடையவன் விதுரன். அவனுக்குத்திருதராட்டிரன் தந்தவேலை ஒருசிறிதும் மனதிற்கிசைந்த தொன்றன்று. உறுதியான குணம் படைத்தவனொருவனுக்கு இக்காலத்தில்இத்தகையதருணம் நேருமாயின் அக்காலை இப்பணி தகாதென மறுப்பன். ஆயினும் விதுரனுடைய காலம், இந்துமக்களின் நல்லொழுக்கம் நிரம்பியகாலம். அக்காலத்தவருக்குத் தந்தையே தெய்வம்;

தமையனே தந்தையாவான். பணிவும் கீழ்ப்படிதலுமே அன்னார்க்குச் சிறந்த தருமம். மேனாட்டு நாகரிகம் விஞ்சிய இக்காலத்தில் உண்டாயிருக்கும் மாறுதல்களென்னே! இந்தியர்க்கே சிறப்புடைத்தாய்ப் பலநாட்டினர்களாலும் புகழத்தகுந்த சிற்சில நல்லொழுக்கங்கள் மாறி நிலைகுலைந்துபோயின. அதோடு, அவ்வொழுக்கங்களைப் பின்பற்றி யொழுகுபவர் எளனத்திற்கும் நெடுநகைக்கும் இரையாகின்றனர். இரவில், நெடுநேரம் வம்பப் பரத்தரொடும் வல்வினை யாளரொடும்', பயனில்சொல் பலமொழிந்து நகைத்து ஆர்ப்பரிக்குங் கால் வயதுமுதிர்ந்த நல்லானொருவன், 'காலங்கழிந்தது; இரவு நீண்டது; என் தாய் என்றன் வரவுநோக்கிஇருப்பள்;"யான் போவல், என மொழிவானாயின், புடைசூழ்ந்தார் பலரும்'ஓகோ, நாற்பது வயது குழந்தை, அம்மா அடிப்பள்! அவனைஉடனே அனுப்பிவிடுங்கள்" என்றுசொல்லிப் பெருநகைபுக்கு அந்நல்லானை முகங்கோணச் செய்வர். விதுரன்உறைந்த காலத்தை மனதிற் கொண்டகவி, அக்காலத்தி லவன் எங்ஙனம் நடந்திருப்பானென வெண்ணி நாடகநூலில் நடிகர்களின் குணங்கள் வெளிப்படும்படி அவர்களை வார்த்தையாடச் செய்வதுபோல் இங்கும் விதுரன்வாயில் அவனுக் கேற்ற மொழிகளை யமைத்திருக்கிறார்.

தமயன் பணியை மறுக்கமாட்டானாய்த் தன் மனதிற் கொவ்வாத வேலையை மேற்கொண்ட விதுரன் யாவரும் ஆதனத் தமர்ந்தபின் சிறிதுநேரம், பொதுப்பட யோகக்ஷேமங்களை வினவிக்கொண்டே, பாண்டவரை ஒருபுடை யழைத்துச்சென்றான். பின்னர், முன்னும்பின்னும்நோக்கி அவர் தனித்திருந்தபோதுதான் தான்வந்த காரியத்தை யெடுத்துப் பேசலாயினன். ஏன்? அவன் காரியம்பிழையுள்ளது; பிறரால் உற்று நோக்கத் தகுந்ததன்று. அது இன்னதோர் தன்மைத் தென்று தன்னெஞ்சறிதலால், அந்நெஞ்சு மறைவிடமும் ஏகாந்தமும் நாடியது.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[176-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 1.

போர்ஷியா வருகின்றாள் (1)

போர்ஷியா:—ப்ரூட்டஸ், என் தலைவ!

ப்ரூட்டஸ்:—போர்ஷியா, என்னிது? இப்பொழுது ஏன் எழுந்தனை? நொய்ய உன் நிலையை, குளிர்ந்து கூசும் பச்சை இக் காலைவேளைக்காளாக்குவது உன்னுடல்நலத்திற் குற்றதொன்றன்று (2)

போர்ஷியா:—உன்னதற்குந்தான் உற்றதன்று. (3) ப்ரூட்டஸ், தகவின்றி யென் பாயலினின்று நீ கரந்து பெயர்ந்தனை. (4) நெருநலிரவு, உணவருந்துங்கால், துண்ணென எழுந்து, கைகளைக் குறுக்கிடமடக்கி, நீள்நினைவும் நெட்டுயிர்ப்புமாய் இங்குமங்கும் உலவலாயினை. செய்தி யாதென யானுன்னை வினவியக்கால், மென்மையில்லாப் பார்வைகளால் என்னை நீ விழித்து நோக்கினாய். மேலும் நான் முனைந்து கேட்டெனென். அதற்கு நீ, பொறையிழந்து கால்களால் தரையினை உதைத்தனை. பின்னும் யான் வற்புறுத்தினேன், பின்னும் நீ பதிலளித்தா யல்லை; சினமுடன் கைவிதிர்த்து, நானுன்னைவிட் டகலவேண்டுமென்றுதான் குறித்தனை: மிகுதியுங்கனன்று தோன்றிய அவ்வாற்றாமையை அதிகமாக்க அஞ்சியும், மனிதரனைவர்க்கும் ஒவ்வோர்வேளை உளதாகும் மனோவிகாரத்தின் காரியமே இது என நம்பியும், நானும் விலகினேன். (5) உண்ணவும், உரைக்கவேனும் உறங்கவேனும் உன்னை விட்டிலது அது. உன் இயல்பினை அதிகமும் ஆட்கொண்டதேபோல் உனது உருவத்தையும் அது அரித்திருக்கக்கூடுமாயின், உன்னை யான், ப்ரூட்டஸ், அறிதற்கியலாது. (6) அன்புடைய என் தலைவ, உன் துயரத்தின் காரணத்தை எனக்குத் தெரிவித்திடு.

ப்ரூட்டஸ்:—உடற்சுக மின்றி யிருக்கின்றேன், அவ்வளவுதான்.

(1) போர்ஷியா என்பவள் ப்ரூட்டஸின் உத்தம மனைவி. கேடோ என்பவன் புத்திரி. கேடோ, உரோம் செனட் சபையில் மிக்க செல்வாக்கு வாய்ந்தவனா யிருந்தவன். ஆடம்பரமற்ற வாழ்க்கையும், தருமஒழுக்கமும், தன்னலமறுத்த சிந்தனையும், அசையாத நீதியும், ஐயமற்ற தேசபக்தியும் உடையவனாகிய இப்பெருமகனை உரோமர்கள் நன்கு மதித்திருந்தனர். ஜூலியஸ்ஸீஸர் பாம்பே க்ரேஸஸ் என்னும் அம்மூவரும் செய்துகொண்ட உடன்படிக்கையால் தேயத்திற்கு விளையக்கூடிய கேடுகளை எடுத்துக்காட்டி அதனை அஞ்சாமல் எதிர்த்துப் பேசியவன். இவனுடைய கட்சி ஜூலியஸ்ஸீஸரினால் தோல்வியடையவும் தற்கொலைபுரிந்துகொண்டு மாய்ந்தான்.

(2) பச்சைப் புண், பச்சை இரத்தம் என்பதுபோல், குளிர்ந்துகூசும் காலைவேளை, பச்சை வேளை என்று இங்கு வழங்கப்பட்டது. வியாகுலமுடன் இயல்பு மாறிய ப்ரூட்டஸ் தன் படுக்கையினின்று எழுந்துபோய்ச் சிலருடன் இரகசியமாய்ப் பேசியிருந்தானென்பதைத் தெரிந்துகொண்ட போர்ஷியா, அவர்கள் சென்றதும், விடயம் யாதெனத் தன் கணவனை வினவுதற்கு அங்கு வருகின்றாள். அவள் தன் கருமத்தை வினவவருவதை விரும்பாத ப்ரூட்டஸ், இவ்வளவு காலையில் வெளிவருவது அவள் உடல்நிலைக்கு நல்லது அன்றெனத் தடுக்கின்றான்.

(3) உன்னதற்குந்தான்—உன் உடல்நலத்திற்குந்தான் இவ்வேளையில் வெளிவருவது நல்லதன்று—என இவள் எதிர் உரைக்கின்றாள்.

(4) என் பாயலில் படுத்திருந்த நீ யானறியாமல் மெல்ல எழுந்து போய்விட்டாய்—இது தகவன்று.

(5) நான் கேட்கக்கேட்க உன் ஆற்றாமையே அதிகமாவது கண்டு, இன்னும் வற்புறுத்துவது நல்லதன்றென நான் விலகிவிட்டேன்.

(6) உன் மனத்திலுள்ள அது, உன் இயல்பினை முற்றிலுந் திரித்துவிட்டது. முன்போல் நீ என்னுடன் நயமுறப் பயில்கின்றாயல்லை. மாறியகுணத்தினால் இப்பொழுது நீ வேறொருவன்போல் ஆகிவிட்டாய். இப்படியே இது உன் உருவத்தையும் மாற்றிவிடுமாயின் பிறகு உன்னை ஒருவழியிலும் அடையாளம் தெரிந்துகொள்ள இயலா

போர்ஷியா:—ப்ரூட்டஸ் அறிவாளி; சுகமிலனாயின் அதனை அடைவதற்குரிய வழியைத்தழுவுவான்.(7)

ப்ரூட்டஸ்:—ஏன்! அப்படித்தான் செய்கின்றேன்—நல்லாய் போர்ஷியா, நீ படுக்கச் செல் (8).

போர்ஷியா:-நோய்கொண்டுளனோ ப்ரூட்டஸ்? ஆயின் போர்வை யின்றி வெளிப்போந்து, ஈரப் புலரியின் சீதளத்தினை உறிஞ்துகொள்ளல் உடலிற் குற்றதாகுமோ? என்ன! ப்ரூட்டஸ் நோய்கொண்டுளனோ?—ஆயின், இரவின் தீய தொத்துநோய்க்குத் துணிந்து, அசுத்தமாய கபவாதக்காற்றினைச் சோதித்துத் தன் பிணியைப் பெருக்கிக்கொள்ளத்தான் செவ்விய சயனத்தினின்றும் கரந்தேகுவானோ (9)? இல்லை, என் ப்ரூட்டஸே! உன் மனத்தினுட்டானே ஏதோ நோயுடையை; என் இடத்தின் நலத்தினாலும் உரிமையாலும் யானதனை அறிதல்வேண்டும் (10) உவந்தொருகாலத்துப் பாராட்டப்பெற்ற என்னழகினாலும், அனைத்துன் அன்புச் சூள்களாலும், நம்மிருவரையும் ஒருவராய் அமைத்தவப் பெரிய சபதத்தாலும், மந்திரஞ் செய்தாற்போல், உண்மையை உரைக்குமாறு நான் உன்முன் முழந்தாளிட்டு மன்றாடுகின்றேன். பாரமுடன் எற்றுக்கு நீ இருக்கின்றாய்; இருளிற்கும் தம் முகத்தினை மறைத்தனராய் அறுவரொழுவர் இங்கிப்பொழுது வந்திருந்த மனிதரிவர்யாவர்—நீயே, உன்னில் ஒரு பாதியேயாமெனக்கு நீஇவைகளைவிண்டிடாய்(11).

ப்ரூட்டஸ்:—மெல்லியல் போர்ஷியா, முழந்தாளிற் பணியற்க.

போர்ஷியா:—மெல்லிய ப்ரூட்டஸாய் நீதான் இருப்பாயாயின் நானிது செய்யவேண்டா (12). விவாகபந்தனைக்குள், ப்ரூட்டஸ் இது சொல், உன்னைச் சார்ந்த இரகசியம் ஒன்றையும் யான் அறியலாகாதெனத் தவிர்க்கப்பட்டுளதோ(13)? நான் நீயே என்பதெல்லாம் ஒருவாறு ஓரளவு தானோ? (14)—உண்ணுங்காலுன்னுட னிருக்கவும் உன் சயனத்தைச் சுகஞ்செய்யவும், உன்னோடு சிலபோது உரையாடவும், இம்மட்டுமேயோ! (15) உன்னுடைய நற்பிரியத்தின் புறநகரிற்றான் குடியிருக்கின்றேனோ நான்! (16)? அதற்குமேலில்லையாயின், ப்ரூட்டஸின் பரத்தையே போர்ஷியா, மனையாளல்லள்.

ப்ரூட்டஸ்:—நீ என் மாண்புடைய உண்மை மனைவியே. இனைகின்ற என் இதயத்தை வந்தடையும் செந்நீர்த் துளிகளேபோல் எனக்கு அருமைவாய்ந்தவள் (17).

போர்ஷியா:—நிசமிதுவாயின், இவ்விரகசியத்தை யான் அறிதல் வேண்டும். நான் பெண்பாலொருத்தியே என்பதை ஒப்புக்கொள்கின்றேன். ஆயினும் என்! பெருமகன் ப்ரூட்டஸே தாரமாய்க்கொண்டவோர் பெண்: நான் பெண்பாலொருத்தியே என்பதை ஒப்புக்கொள்கின்றேன்; ஆயினும் என்! நன்மதிப் புடையவோர் பெண்—கேடோவின் புத்திரி (18). அத்தகைத் தந்தையேன், அத்தகைக்கணவனேன், நான் என் இனத்தினு மதிகமாய திடமற்றவள் என்று நீ நினைத்தனையோ (19)? உன் சிந்தனைகளைச் சொல், நான் வெளிப்படுத்தமாட்டேன். இந்தத் துடையில் இங்கு நானே எனக்கோர் புண்செய்துகொண்டு, என்னுடைய நெஞ்சத்திட்பத்தைத் தெரியக் காட்டி யுள்ளேன்: பொறுமை

மற் போய்விடும். அப்புறம் நீ முற்றிலும் ஒரு அயலான் போலவே தோன்றுவாய்—என்பது பொருள்.

(7) உடற்சுகமில்லையாயின், உன்போன்ற அறிவுடையவொருவன் அச்சுகத்தைப் பெறுவதற்குரிய வழியை யன்றோ நாடவேண்டும்-அப்படியன்றி அதற்கு மாறாகச் செய்யலாமோ—என்பது பொருள்.

(8) கேயஸ்லிகேரியஸ் அப்பொழுது அங்கு வரஇருக்கின்றான் தன்காரியத்தைப்போர்ஷியா தெரிந்துகொள்ளலாகாதென மறைக்க முயல்கின்ற ப்ரூட்டஸ், அவன் வருவதற்குள் போர்ஷியாவை அவ்விடம்விட்டு அகற்றி விடப்படுகின்ற அவசரம் இது.

(9) தேற்றத்தின்பொருட்டு முன்னிலையில் படர்க்கை வந்த வழுவமைதி இது. "அறிவுடையநீ, நோயுடையை ஆயின், இவ்வாறு இரவில் போர்வையின்றி வெளிப்போந்து பனிக்கும் குளிரிற்கும் உன்னை ஆளாக்கிக்கொள்வாயோ!—அது செய்யாய். ஆதலின், உடல்நோய் உன்னை வருத்துகின்றதென நீ உரைக்கும்இது நிசமன்று—என்று போர்ஷியா மறுக்கின்றாள்.

(10), என் இடம், என்பது இங்கு மனைவியென்னும் ஸ்தானத்தைக் குறிக்கின்றது.

(11) நீ முன் பெரிதும் பாராட்டியுள என் அழகை நினைத்துக்கொள்; நின் அன்பினை வற்புறுத்திச்சொன்ன சூள்களை யெல்லாம் நினைத்துக்கொள். புருடன் மனைவி என்ற பான்மையில் நீயும் நானும் ஒருவராயினோம் என்பதையும் நினைத்துகொள் நினைத்து, எனக்கு இப்பொழுது உண்மையைச்சொல், என்று போர்ஷியா வற்புறுத்துகின்றாள்.

(12). மென்மைத்தன்மை வாய்ந்த போர்ஷியா, என்று ப்ரூட்டஸ் அவளை அழைத்ததற்கு எதிராக அவள், "நீயும் கன்னெஞ்சனா யல்லாது, இளகிய இதயம் உடையவனா யிருப்பாயாயின், நானிப்பொழுது உன்முன்னர் முழந்தாளிட்டு வேண்டிக்கொள்ளும்படி நேர்ந்திருக்காது--என்று எடுத்துக் காட்டுகின்றாள்.

(13) கணவனது இரகசியங்களை மனைவி யறியப்படாதென்று தவிர்த்துத்தான் இருவரும் ஒருவர் என்ற விவாகபந்தனை ஏற்பட்டதோ—என்பது பொருள்.

(14) நீயும் நானும் ஒருவரென்பது எல்லாப்படியாலும் ஆவதின்றி, சிற்சிலவற்றில்தானோ, ஆகின்றோம்? அல்லது அதற்கு முழுமையுண்டோ—இயம்பு.

(15) மனைவி என்பவளுக்கு இருக்கின்ற உரிமைகளெல்லாம் இவ்வளவுதானோ, என இடித்துரைக்கின்றாள்.

(16) உன்னுடைய உள்ளன்பிற்கு உரியவளாக்காமல், என்னை வெளியே ஒதுக்கிவைத்து, உன் இஷ்டத்தினளவே ஏற்றுக்கொள்வதென் றிருக்கின்றாயோ, என்பது பொருள்.

(17) இனைகின்ற - துயர்கூர்ந்த. செந்நீர் - இரத்தம். என்னுடைய இரத்தமேபோல் நீ எனக்கு இன்றியமையா அருமைவாய்ந்த உண்மை மனைவி ஆவாய்—பரத்தைபோல்பவள் என்று பேசாதே—என்று தடுத்துரைக்கின்றான்.

(18) பெண்ணென்ற பான்மையால் உன் இரகசியங்களை எனக்கு உரைக்காமல் மறைப்பாயாயின் அது நேரிதன்று. பெருமகனாகிய நீயே என்னை மனைவியாகக் கொள்ள இசைந்தாயெனின், நான் எல்லாப் பெண்களையும் போன்றவொரு சாதாரணப் பெண்ணே யாவேனோ; மேலும் நான் கேடோவின் புத்திரி. அத்துணை உத்தமனுக்குப் பிறந்தேனென்னும் புகழுடைய என்னைப் பொதுவற நின்ற பெண்ணென்று கருதவேண்டாவோ.

(19) தந்தையேன் - தந்தையையுடைய நான்; கணவனேன் - கணவனையுடைய நான்; எனப் பொருள்காணவேண்டும். என் இனம் - பெண்ணினம்.

யுடன் அதனைத் தாங்கவல்ல நான், என் நாயகன்றன் இரகசியங்களைத் தாங்காமற் போவேனோ? (20).

ப்ரூட்டஸ்:—ஓ தெய்வங்காள், இப்பெருந்தகை மனையாட்டிக்குயான் பாத்திரனாகுமாறு புரியுங்கள்.(21)

[உள்ளே கதவைத் தட்டுகின்ற சப்தம் கேட்கின்றது]

கேள், கேள்! யாரோ இடிக்கின்றார். போர்ஷியா, சற்றே நீ உட்செல்; பிறகு என்னிதயத் திரகசியங்களை உன் மார்பு பகிர்ந்துகொள்வதாகும். (22) நான் கைக்கொண்டுள கருமங்களையும், துயர்கூரும் என் புருவங்களின் தன்மையையும் உனக்கு யான் விளக்குவேன். இப்பொழுது என்னைவிட்டு நீ விரைந்தேகுக. [போர்ஷியா போகிறாள்]

[லிகேரியஸுடன் லூஸியஸ் வருகின்றான்.]

லூஸியஸ்:—உன்னுடன் உரையாட விரும்பும் பிணியாளன் ஒருவன் இங்குளன்.

ப்ரூட்டஸ்:—மெட்டல்லஸ் சொன்ன கேயஸ் லிகேரியஸ்—பையா விலகிநில்—கேயஸ் லிகேரியஸ்—என்னிது! (24)

லிகேரியஸ்:—தளர்ந்தவோர் நாவினின்று வந்தனத்தை ஏற்றுக்கொள் (25)

ப்ரூட்டஸ்:—ஓ! துணியொன்று சுற்றிக்கொள்ள, ஆண்டகைக் கேயஸ், எவ்வேளை தேடியெடுத்தனை; நோயின்றி நீ இருக்கலாகாதா! (26)

லிகேரியஸ்:—கவுரவம் என்னும் பெயர்க்குரிய அருந்தொழில் ஏதேனும் ப்ரூட்டஸ் கைக்கொண்டுளனாயின் நான் நோய்கொண் டிருக்கின்றேனல்லேன்.

ப்ரூட்டஸ்:—கேட்பதற்கொரு செவ்விய செவிதானுடையையாயின் - அத்தகைய அருந்தொழிலொன்றே யான் கைக்கொண்டுளேன் (27).

லிகேரியஸ்:—உரோமர்கள் வணங்குமக் கடவுளர்கள் எல்லோரும் கரியாக, என் நோயினை இதோ இங்கு நான் உதறிவிட்டேன். (28) உரோமின் உயிரே, பெருந்தகையாளர் வழிவந்த வீரப் புதல்வா! உணங்கும் என்னுணர்வினை நீ மந்திரவாதியைப்போல், எழுப்பிவிட்டாய். இப்பொழுது என்னை ஓடச்சொல்; செய்கலாற்றாதவைகளையும் முயலுவேன்; வெல்லவும் வெல்வேன்காண். இயற்ற வேண்டியது யாது? (29)

ப்ரூட்டஸ்:— நோயாளிகளை முழுமையாக்கும் காரியம் ஒன்று (30).

லிகேரியஸ்:—மற்று, முழுதாயிருக்கின்ற சிலரை நாம் நோய்ப்படுத்த வேண்டாவோ? (31)

ப்ரூட்டஸ்:—அதுவுந்தான் நாம் செய்தல்வேண்டும். என் கேயஸே, அது யாதென்று, யாருக்கதனைச் செய்யவேண்டுமோ அவனை நாடிநாம் செல்லும் வழியிலே, உனக்கு யான் விண்டுரைப்பேன்.

லிகேரியஸ்:—புறப்படு; யாதென்று தெரியாததைச் செய்ய நான் புத்தூக்கம் மூண்ட வென் இதயத்தோடும் உன்னைப் பின்தொடர்வேன். ப்ரூட்டஸ் என்னை நடத்துகின்றான் என்பதே போதும் (32)

ப்ரூட்டஸ்:—ஆயின், என்னைத் தொடர்ந்துவா.

[போகின்றனர்]

முதற்களம் முடிகின்றது.

---

(20) பெண்ணாயினும் தான் எத்தனை இக்கட்டுடைய நிலைகளிலும் தளராமல் இருக்கவல்லளென்பதைத்தானே தன் துடையில் செய்துகொண்ட புண்ணினைக்காட்டி வற்புறுத்துகின்றாள். இந்த நோயைப் பொறுத்துஎற்றவளுக்கு நாயகனது இரகசியத்தைப் பொறுப்பது ஒரு பொருளோ—என்கின்றாள்.

(21) தன் மனைவியின் அன்பையுந்திடத்தையுங்கண்டு ப்ரூட்டஸ் மனங் கரைந்து, இவளுக்குக் கணவனாதற்கொத்த தகுதி தனக்குண்டோ என நாணுகின்றான்.

(22) அதற்குள், கதவிடி சப்தத்தால் லிகேரியஸ் வந்துவிட்டானென்பதுணர்ந்து, பின்னர் தன் இரகசியத்தை அவளுக் குரைப்பதாக வாக்களித்து இப்பொழுது அவளை விரைந்து விலக்குகின்றான்.

(23) கதவிடிசப்தம் இப்பொழுது கேட்காமல் இன்னும் ஐந்து நிமிடம் பொறுத்துக் கேட்டிருக்குமானால் சரித்திரம் எப்படி மாறியிருக்குமோ யாரறிவார்? ப்ரூட்டஸ் இப்பொழுதே போர்ஷியாவிற்கு எல்லாவற்றையும் உரைத்திருப்பான். அவளும் ஒருகால் இப்படுகொலைக் கொவ்வாது அவன் மனத்தினை மாற்றி யிருக்கலாம். எனின், ஸீஸர் கொலையுண்டதற்கு இந்தக் கதவிடியே காரணம் என்றாலும் ஒக்கும்.

(24) லிகேரியஸின் நோயுற்ற நிலையைக்கண்டு ப்ரூட்டஸ், என்னிது என்று வியக்கின்றான்.

(25) நான் நோயுற்றிருப்பதால் வலிவற்ற என்நாவிலிருந்துவரும் இவ்வந்தனையை நீ ஏற்றுக்கொள்—என்பது பொருள்.

(26) மார்க்கஸ் ப்ரூட்டஸ், மெட்டல்லஸ் ஸிம்பர், கேயஸ் காஸ்ஸியஸ், என்பனபோல், கேயஸ் லிகேரியஸ், என்பது இரண்டு மொழிகள் கொண்ட ஒரே பெயர். இங்கு அவனைக் கேயஸ் என்று மட்டும் ப்ரூட்டஸ் அழைக்கின்றான்.

(27) செவ்விய செவி—நோயற்ற செவி. நீ நோயின்றி இருப்பாயாயின் நான் கைக்கொண்டுள்ள அருந்தொழில் இன்னதென் றுரைக்கலாம்; மற்று நோயுற்ற உன்னிடம் இப்பொழுது அதனை உரைத்து என்னபயன்—என்பது பொருள்.

(28) கரியாக - சாக்ஷியாக. நோயுடைய காரணத்தால் நானெதற்கும் இனிப் பின்னிடேன், என்பது பொருள். அப்படிச் சொல்லியவண்ணமாய் அவன் சுற்றிக்கொண்டிருந்த துணியை நீக்கி எறிந்திருக்கலாம்.

(29) இப்பொழுது நீ என்ன செய்யச்சொன்னாலும் அதற்கு நான் ஆயத்தமா யிருப்பதன்றியும், அதனைச் செய்தும் முடிப்பேன்—என்பது பொருள்.

(30) ஸீஸரின் கொடுமையால் வருந்துகின்ற சனங்களை நோயாளிகளென்றும், அந்நோய் நீங்கி அவர் முழுவதாகும் (குணமாகும்) காரியம் ஒன்று இருக்கின்றதென்றும் கருத்திற்கொண்டு, லிகேரியஸின் நோய் தீர்வதற்குரிய காரியம் என்ற பொருளிற் கூறுவதுபோல் இவ்வண்ணம் பிறிது நவில்கின்றான் ப்ரூட்டஸ்.

(31) ப்ரூட்டஸின் உட்கருத்தை உணர்ந்துகொண்ட லிகேரியஸ் அக்குறிப்பேகொண்டு வினவுகின்றான்.

(32) நீயே என்னை நடத்துகின்றாய் என்றபோது, காரியம் இன்னதென்று தெரியாவிடினும் உன்னைப் பின்தொடர்ந்து இட்ட கட்டளையைச் செய்ய யான் சித்தமாயிருக்கின்றேன்—என்பது பொருள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—4. ஜடாயுகாண் படலம்.

[177-வது பக்கத் தொடர்ச்சி]

பழிப்பில தேலோரு பசையு மில்லையே.

பேரெண்ணினி லிருக்குமொரு பெருமானைக் கண்ணினிற் கண்டு, இப்பரம்பொருள் இன்று உரைக்கும் உதவும் என்னும் உணர்ச்சியின் உவப்பவனாய அகத்தியமுனிவன் இராமனை எதிர்கொண்டு அளவளாவி, அரக்கரை அழிக்கவவன் வந்துள்ள கருமமுமறிந்து, வடிவாளும் நெடுவில்லும் புட்டிலும் அளித்து, அவர்தமைப் பஞ்சவடி போகுநெறி யுய்த்தனன். உய்த்தநெறி போகுமுன், சீதையின்பால் பரிவுமிக் கிளகிய அக்குறுமுனி, அவளை அவள் கணவன்மாட்டுக் கையடைத்துக் கொடுப்பான்போல்,

"இவள் தங்களைக் காட்டுக்குத் தொடர்ந்துவந்ததனால் மாதர்களுக்கு அசாத்தியமான காரியத்தைச் செய்கிறாள். ஆகையால், இராமா, அவள் சந்தோஷத்திற்கு ஒருவித குறைவுமில்லாதபடி தாங்கள் நடந்துகொள்ளவேண்டும். உலக முண்டான காலம்முதல் விசேஷமாக மாதர்கள் தங்கள் கணவர்கள் நல்ல ஸ்திதியில் இருக்கும் வரையில் அவர்களிடம் சந்தோஷமாக இருந்து, அவர்கள் தளர்வெய்திய காலத்து அவர்களைக் கைவிடுவார்கள். மின்னலின் நிலையாமை, ஆயுதங்களின் கூர்மை, கருடாநிலர்களின் வேகம், இம்மூன்று குணங்களும் மாதர்களிடம் ஒருங்கே சேர்ந்திருப்பதால், அவர்கள் தங்கள் புருஷர்கள் கஷ்டப்படுங் காலத்தில் அவர்களை விட்டு நீங்குவார்கள். ஆனால், தமது மனைவியாகிய சீதையோ, இவ்வித தோஷங்கள் ஒன்று மில்லாமல் விளங்குகிறாள்"

என்று வான்மீகத்தி லெடுத்தியம்பிய சொற்கள் தமிழ் நூலினுள், பெண்பாலார் பின்செய்த புண்ணியத்தால் தவழ்ந்தில. சீதையைப் புகழவேண்டுமெனின் அச்சீதையைக் கொண்டே முழுதும் புகழ்ந்திருக்கலாமே; அஃதின்றி 'உலகமுண்டான காலம்முதல்' தோன்றிய மாதர்களையெல்லாம் பழித்தழிக்கக் காரணம் காண்கிலேம். நறுந்தாதுண்டு வறும்பூத்துறக்கும் வண்டுபோல்பவர் என அப் பரத்தைமுதியோள் சித்திராபதி காமக்கணிகையர்க் குரைத்த இலக்கணத்தையே, உலோபாமுத்திரையின் கணவன், உலகமுண்டான காலம்முதல் தான் கண்ட குலமாதருக்கெல்லாம் சார்த்தநேர்ந்தனன். மற்று, கணிகையர் திறத்திலும் அப்பொது விதி பழுதுபடநின்றதென அவள்மகள் மாதவி புரிந்து காட்டினாள்.

இன்னணம், ஏகதேசமாய் எதனையு மெடுத்தெளிதிற் பேசிவிடல் வடமொழி மரபிற்கே உரியதாகக் காண்கின்றோம். சுதீக்ஷணர்பால் விடைகொண்டவச் செவ்வியில், தான் கடிதின் ஏகல்வேண்டும் என்பதை இராகவன்,

"கெட்ட வழியால் வந்த சம்பத்தை அடைந்து நெறி நீங்கி அலையும் அற்பன்போல் சகிக்க முடியாத வெயிலால் சூரியபகவான் பிரகாசிக்குமுன் நாங்கள் புறப்பட வேண்டும்"

என்று இயம்புவானேன்! ஏகதேச உவமந்தான் ஈதென்ன அமைதிகாட்டுவார் காட்டுக. தன் குலமுதல்வனப் பரிதியங்கடவுளை இங்கோர் அற்பனுக் குவமித்துப் பேசுமிது உவமையினுந் தகவன்று.

பழிப்பிற்கிடமமைந்த சொற்களிவை பகர்கின்றபோதல்லால் ஏனையவைகளெல்லாம் பெரும்பாலும் வடநூலிற் பசையற்றுப் போகின்றன. பின்னர்த் தன்னின்னுயிரைத் தம்பொருட்டு ஈயநின்ற தந்தையேயனைய கழுகின்வேந்தன் சடாயுவைக் காண்கின்றார் இராம லக்மணர்கள். இந்தச் செவ்வி உருகிய மனமும் பெருகிய அன்பும் அமைந்தயரவல்லதாயினும், வான்மீகமுனிவர் அதற்கு வார்த்தைகளே யன்றி வேறொன்றும் வரையாது அளித்தாரல்லர். கம்பர்பெருமான் இதனைக் கையாளுந் திறத்தினைக் காண்பதன்முன், வடநூல்முனிவர் வழங்கிய சொற்களைக் கேட்டுக்கொள்ளலாம்:—

பஞ்சவடிக் கேகும்பொழுது இராமர் அதி பராக்கிரமம் பொருந்தியதும் பருத்த உடலையுடையதுமான கழுகொன்றைக் கண்டார். ஒரு பெரும் ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த அக்கழுகைக் கண்டு இராமலக்ஷ்மணர்கள் அதனை ஓரரக்கனென்று தங்களுக்குள்ளே எண்ணிக்கொண்டு அதைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டார்கள். அக்கழுகு அவர்களைப்பார்த்து, வெகு மதுரமாகவும் பிரியமாகவும், "என் குழந்தைகளே, நான் உங்கள் தந்தையின் தோழனென்று அறிந்துகொள்ளுங்கள்" என்றது. தம்முடைய தந்தையின் தோழன் என்று கேட்டமாத்திரத்தில் இராமர் அக்கழுகினுக்கு மரியாதை பண்ணி, அதன்மேல், அப் பக்ஷிராஜனுடைய குலத்தையும் பெயரையும்பற்றிக் கேட்டார். இராமர் சொன்னதைக்கேட்டு அப் புள்ளரசு எல்லாப் பிராணிகளுடைய உற்பத்தியையும் தனது பெயரையும் பின்வருமாறு சொல்லிற்று:—"இராகவா, முதலிலிருந்து பிரஜாபதிகளாயிருந்தவர்களெல்லாரையும்பற்றிச் சொல்லுகிறேன் கேள். முதற் பிரஜாபதி கர்த்தமர், அவருக்குப் பிறகு விக்கிரீதர், அவர்க்குப் பின் சேஷர், சம்சிரயர், வீரியமுடைய பகுபுத்திரர், ஸ்தாணு, மரீசி, அத்திரி, மகாபலம்பொருந்திய கிரது, புலஸ்தியர், அங்கிரஸ், பிரசேதஸ், புலகர், தக்ஷர், விவஸ்வான்; இவர்களெல்லாரும் பிரஜாபதிகள். இவர்களுக்குப் பின் வந்தவர் மகாகாந்தியுடன் விளங்கிய அரிஷ்டநேமியென்று சொல்லப்படும் காசியபர். தக்ஷ பிரஜாபதிக்கு மிக்க பெருங்கீர்த்திபொருந்திய ஐம்பது புத்திரிகள் இருந்தார்களென்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோ மன்றோ? அவர்களில் மெல்லிய இடையுடைய பெண்கள் எண்மரைக் காசியபர் விவாகம் பண்ணிக்கொண்டார். அவர்கள்தாம் அதிதி, திதி, தனு, காளிகை, தாமிரை, குரோதவசை, மனு, அனலை என்று சொல்லப்படுவோர்கள். அவர்களிடத்தில் வெகு சந்தோஷமடைந்த காசியபர் அவர்களை நோக்கி, "இம்மூவுலகங்களையும் காத்தற்கு வல்லராகிய என்னைப்போன்ற பராக்கிரமமுள்ள குமாரர்களை நீங்கள் அடைவீர்கள்" என்று சொன்னார். அப்படி அவர் சொல்ல அதிதி, திதி, காளிகை மூவர்களுந் தங்களுக்கு அம்மாதிரிக் கீர்த்தியுள்ள புதல்வர்கள் உண்டாவார்களென்று மனவுறுதியோடு களித்திருந்தார்கள். மற்றவர்கள் அவ்வாறு நினைக்கவில்லை. அதிதியினிடமிருந்து பன்னிரண்டு ஆதித்தியர்கள், எட்டு வசுக்கள், பதினொரு ருத்திரர்கள், இரண்டு அசுவினிகள் ஆகிய முப்பத்துமூன்று தேவர்கள் உண்டானார்கள். இராமா, திதியினிடமிருந்து பெயர்பெற்ற தைத்தியர்கள் பிறந்தார்கள். கடல்சூழ்ந்த காசினியும் அவர்கள் ஆதீனத்தில்தான் ஆதியில் இருந்தது. பகைவரை அடக்கும் பண்பினனே, தனு அசுவக்கிரீவன் என்பவனைப் பெற்றாள்; காளிகை, நரகன்

காலகன் என்பவர்களைப் பெற்றாள்; தாமிரை கிரௌஞ்சி, பாசி, சேனி, திருதராஷ்டிரி, சுகி என்ற ஐந்து கன்னியர் களைப் பெற்றாள். அவர்களுள், கிரௌஞ்சி கோட்டான் களைப் பெற்றாள்; பாசி கோழிகளையும், சேனி வலியுள்ள கழுகுகளையும், பருந்துகளையும், பெற்றார்கள்; திருதராஷ் டிரி அன்னப் பறவைகளையும், சக்கரவாகங்களையும் பெற் றாள். சுகி, நதை என்பவளைப் பெற்றாள். நதையின் பெண் விநதை. குரோதவசைக்குப் பத்துப்பெண்கள் பிறந்தார்கள். அவர்கள் பெயர் மிருகி, மிருகமந்தை, ஹரி, பத்திரமதை, மாதங்கி, சார்த்தூலி, சுவேதை, சுரபி, சகல லக்ஷணங்களும் பொருந்திய சுரசை, கத்ருகை என்பன. ஓ புருஷோத்தமா, மான்களெல்லாம் மிருகியின் குழந்தைகள். மிருகமந்தை பெற்றன கரடிகளும், ஸ்ரமரம் என்ற மான்களும், கவரி மான்களுமாம். ஹரி என்பவளிடம் சிங்கங்களும், பல் முள்ள அநேக குரங்குகளும் பிறந்தன. பத்திரமதை இராவதி என்ற பெண்ணைப் பெற்றாள். இவள் இவ்வுலகத்துக் கெல்லாம் யஜமானுக விருக்கும் ஐராவதமென்ற யானையை ஈன்றாள். மாதங்கியிட மிருந்து மதயானைகள் ஜனித்தன. சார்த்தூலி கோலாங்கூலம் என்ற குரங்குகளையும் புலிகளை யும் பெற்றாள். சுவேதை திக்கஜங்களைப் பெற்றாள். சுரபி என்பவளுக்கு இரண்டு கீர்த்திபெற்ற பெண்கள் பிறந்தார் கள். அவர்கள் பெயர் ரோகிணி கந்தர்வி என்பன. ரோகிணி மாடுகளைப் பெற்றாள். கந்தர்வி குதிரைகளைப் பெற்றாள். இராமா, சுரசை என்பவள் நாகர்களைப்பெற்றாள். கத்ரு, பன் னர்களைப்பெற்றாள். மனுஎன்பவள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பெயர்பெற்ற மனிதர்களைப்பெற் றாள். அனலை புண்ணியமான பழங்களையுடைய விருக்ஷங்க ளைப் பெற்றாள். விநதை, சுகி என்பவளுடைய பேர்த்தி. கத்ரு என்பவள் சுரசையின் தங்கை. கத்ரு ஆயிரந்தலைகளைக் கொண்டுஇவ்வுலகத்தைத்தாங்கும் ஆதிசேஷனைப்பெற்றாள். விநதை கருடன் அருணன் என்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். நான் அருணன் புத்திரன், என் பெயர் ஜடாயு. என் அண்ணன் ஸம்பாதி என்பவன். எங்களுக்குத் தாய் சேனி. தங்களுக்கு மனமிருக்கும் பக்ஷத்தில் நான் தாங்கள் வசிக்குமிடத்திலேயே இருந்துகொண்டு தங்களுக்குஎன்னால் செய்யக்கூடு முதவிகளைச் செய்வேன். இக்காடு மிக அடர் ந்து மிருகங்களும் ராக்ஷசர்களும் சஞ்சாரம் பண்ணுமிடமாக விருக்கிறது. தாங்களும் லக்ஷ்மணரும் பர்ணசாலையை விட்டு எப்பொழுதாவது வெளியிற் போகும்படி நேர்ந்தால் நான் அக்காலத்தில் சீதையைப் பாதுகாப்பேன்.''

இவ்வாறு சொன்ன ஜடாயுவை இராமர் உபசரித்துக் களிப்புடன் தழுவி வணங்கி, அதற்கும் தம் தந்தைக்குமுண் டான சிநேகவிஷயமான சங்கதிகளை அது அடிக்கடி சொல்ல அதி கவனத்தோடு கேட்டார். பின்பு அந்தப் பலசாலியான ஜடாயுவினிடம் கொஞ்சநேரம் சீதையைப் பாதுகாக்கும்படி ஒப்பித்துவிட்டு, விட்டிற்பூச்சிகளைக் கொளுத்தும் நெருப்புப் போலச் சத்துருக்களைத் தகிக்கும் பராக்கிரமமுள்ள இராமர் லக்ஷ்மணருடன் பஞ்சவடிக்குச் சென்றார்.

இனி, கம்பர் இதனையே புரிகின்ற பெற்றியைநோக்கு வோம். அகத்தியனது ஆசிரமத்தை விட்டுச்சென்ற இராம லக்மணர்கள் சீதையோடும் காவதம் பல கட ந்தபின், கழுகின் வேந்தனைக் கண்டனர். கிரணங்களை விரித்து உதயகிரியின் மீதெழும் இளஞ்சூரியன்போல் அன்னான் தோன்றினன். ஆலமரத்தின்மீதன்றிக் கம்பர் அவனை மலைமுகட்டு முன்றிலிற் காண வைத்த னர். அங்கு அவனுமோர் மந்தரகிரியென வயங்கினன். பறவையின் இடுகிய கண்களையும் நீட்டிய மூக்கையும் கம்பர் மறந்தாரல்லர். எனினும், இயற்கை நவிற்சி யென்றபேரினல்யாதுஞ் சுவையறஇவைகளைச் சொல் லிக் கழிவதின்றி,

> தூய்மைய னிருங்கலை துணிந்த கேள்வியன்
> வாய்மையன் மறுவிலன் மதியின் கூர்மையன்
> ஆய்மையின் மந்திரத் தறிஞ னெனச்
> சேய்மையி னேக்குறு சிறுக ணன்றனை

[தூய்மையுடையவனும், பெரிய கலைகளைக் கேட்டுத் தெளி ந்தவனும், சத்தியத்தை உடையவனும், குற்றம் சிறிது மற்ற வனும், புத்திநுட்பத்தையுடையவனும், ஆராய்ந்தறிகின்ற அறிவுடைய மந்திரக்கிழவன்போல் தூரத்திலிருப்பனவற்றை யும் காண்கின்ற சிறிய கண்களையுடையவனும்]

> வீட்டிவா ளவுணரை விருந்து கூற்றினை
> யூட்டிவீழ் மிச்சிறு னுண்டு நாடொறுந்
> தீட்டிமே லிந்திரன் சிறுகண் யானையின்
> தோட்டிபோற்றேய்ந்தொளிர் துண்டத்தான்றனை

[கொடிய அசுரரைக்கொன்று, எமனுக்கு அவர்களது உயி ரை விருந்தூட்டி, மிகுதியாய்க்கிடந்த அவர் உடலைத் தான் உண்டு நாள்தோறும் தீட்டித்தீட்டி, இந்திரனது சிறிய கண் களையுடைய ஐராவதம் என்னும் யானையின் அங்குசம்போல் தேய்வடைந்து பிரகாசிக்கின்ற மூக்கையுடையவனும்]

ஆகிய அப்பறவைவேந்து, மேருவின் நெற்றி முற்றிய இரவிபோல் பொலிகின்ற மௌலி சூடி இருந்த சித்தி ரத்தினை இனிதின் கூறுவார். சேய்மையின் நோக்குஞ் சிறு கண்களால் இப்பறவையை மந்திரத் தறிஞனுக்கு வார் நம்புலவர். தின்பதூனேனும், அதனையும் மேம் பட உயர்த்திச் சென்று அக்கழுகினை விருந்தோம்பி மிச்சில் மிசைபவனுக்கினர். தீனி தின்றபின் பறவை கள் தம் மூக்கினைத் தீட்டிக்கொள்ளும் இயற்கையை எடுத்தியம்புமளவில், ஐராவதத்தின் அங்குசந்தானும் அரிதின் அமைந்ததோர் உவமை யாயிற்று. இன்ன ணம்,இயம்புவது இயற்கையேயாயினும்அதற்குமோர் அருமையாற் புனைவது கம்பனைய கலைமாண்புடைய சீரியோர் செய்கின்ற சிறப்புக்களாம்.

இன்னவனை, அறிவிலி யோர் அரக்கனோ, அல்ல னேல், எறும்வலிக் கலுழனேயோ வெனச் செறிகழல் வீரரும் செயிர்த்து நோக்க, அவனும், "வில்லினராத லின் வினையறு நோன்பின ரல்லர்; திரிமூர்த்திகளையும் யா னறிவேனுதலின் அவர்களு மல்லர்; காமனென் பானையும் யான் கண்களிற் கண்டுளேன்—இவர் யாவ ரோ; மற்றென் துணைவனுய தயரத சக்ரவர்த்தியை இவ்விருவரும் ஒத்திருக்கின்றனர்'' எனச் சிந்தித்து "நீவிர் யார்''என்று வினவுதலும் பொய் புகல்வதில்லா இம்மைந்தர், "வனைகழல் தயரதன் மைந்தர் யாம்'' என்றியம்பி அவன் துறக்கமுற்றான் என்பதையும் உணர்த்தியவுடன் ஜடாயு ஆவிசோர்ந் தழிந்தனன். மைந்தர் இருவரும் அவனைத் தழுவியெடுத்துக் கண் ணினீரினல் முகங்கழுவித் தேற்றுவாராக, அழிவுறு நெஞ்சினனாய் அப்பறவைக்கிறவன்,

> பரவலருங் கொடைக்குநின்றன் பனிக்குடைக்கும்
> பொறைக்குநெடும் பண்பு தோற்ற.
> கரவலருங் கற்பகமு முடுபதியுங்
> கடலிடமுங் களித்து வாழப்
> புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே
> மெய்க்கணியே புகழின் வாழ்வே
> இரவலரு நல்லறமும் யானுமினி
> யென்படநீத் தேகி னுயே.

[அரசர்க் கரசனே, பொய்ம்மைக்குப் பகையானவனே! மெய்ம்மைக்கு அணிகலன் போன்றவனே, புகழின் வாழ் விற்கு இடம் போன்றவனே, உன் புகழரிய கொடைக்கும், குளிர்ந்த வெண்கொற்றக் குடைக்கும், பொறுமைக்கும், அதனதன் பெருமையால் தோல்வியடைந்த, கரவாதளிக் கும் கற்பகமும், சந்திரனும், பூமியும், இனித் தம்மோடு இகல வல்லன இல்லையென்று களித்து வாழும்படி, யாசகர்களும், நல்ல தர்மங்களும், நானும் என்ன துன்பத்தை அநுபவிக்க எங்களைவிட்டுப் போனயோ]

> தயிருடைக்கு மத்தென்ன வுலகைநலி
> சம்பரனைத் தடிந்த வந்நாள்
> அயிர்கிடக்குங் கடல்வலயத் தயலறிய
> நீயுடனு னுவி யென்று
> செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்
> செப்பினுய் திறம்பா நின்சொல்
> உயிர்கிடக்க வுடலைவிசும் பேற்றினு
> ருணர்விறந்த கூற்றி னுரே

[குற்றம் செய்யாத அழகிய மனமுடையவனே, தயிரைக் கடைகின்ற மத்தைப்போல,உலகைநலிந்தசம்பராசுரனைவெ ன்ற அக்காலத்தில், சிறுமணல் கிடக்கும் கடலால் சூழப்ப ட்ட பூமியில் பிறரறிய, நீ உடல்என்றும் என்னை ஆவியென் று சொன்னுய். உன் சொல்லோ ஒருபோதுந் திறம்பாது. அவ்வாறிருக்க,உயிரை இவ்வுலகில் கிடக்கவிட்டுஅறிவில்லா யமனுனவர், உடலைச் சுவர்க்கத்திற்குக் கொண்டுபோனரே]

என்று, இன்னவாறு பற்பல பன்னி யரற்றினன். இது காறும் இயம்பியன, வான்மீகர் நூலில் இல்லா தனவாம். இதன் பின், ஜடாயு தன் பிறப்பை உணர்த் தப் புகுந்த பாகம் முதனூலில் உளது. எற்றுக்கிதனை யிங்கு இவ்வளவு வித்தாரமாக அம்முனிவர் எடுத்துப் பேசினர், என்றொருவாறு கம்பர் அயிர்க்கின்றாரென் றெண்ண நேர்கின்றது. அருணன்மைந்தன் தானென் றறைவதுபோகச் சிருட்டி முறையனைத்தும் செப்புவ தல்லால்வேறோர் வார்த்தை அங்கு வழங்கக்கற்றிலான யினன். ஜடாயு தயரதனை நினைத்தானல்லன், அவன் மைந்தர்க்கும் மருகிக்கும் அருமையுடன் ஓர் சொல் பகர்ந்தானல்லன், வீண்வார்த்தை விளம்புவதே கரு மமாய் முடிந்துவிட்டான். இவ்வண்ணம் அவன் காடி குரங்கு கோட்டான்களெல்லாம் பிறந்தவகை அறை யவந்ததை ஒரு சிறிது பரிகசித்து வம்புசெய்யவோ கம்பர், அதனைத் தழுவி யெழுதுவார்போல்,

> தானவரே முதலோரைத் தனுப்பயந்தாள்
> மதியென்பாள் மனிதர் தம்மூ
> டானவருணங் களவயவத் தடைவே
> பயந்தனளாற் சுரபி யென்பாள்
> தேனுவுடன் கந்தருவ மற்றுள்ள
> பிறபயந்தா டெரிக்குங் காலை
> மானமுடைக் குரோதவசை கழுதைமரை
> யொட்டைபிற வயிறு வாய்த்தாள்.

எனக் கழுதையையும் ஒட்டையையும் சேர்த்துக்கொ ண்டதுமன்றி அடுத்தசெய்யுளில் ஊர்க்குருவிக்கும் சிவலுக்கும் காடைக்கும் சிருட்டியின்கண் இடம் அமைத்துத் தருகின்றார். கழுதையை மாத்திரம் கழ றுது விடுவானேன் என்பது இவர் கேள்வி. அக்கு றையை யான் முடிக்கின்றேன் என்று துணிந்து முன் வருகின்றார். 'தெரிக்குங்காலை' என்று தொடங்கு வதே இக் குறும்பைத் தோற்றுவிக்கின்றது. கழுதை யைச் சிருட்டியில் சேர்த்துக்கொள்வது அவமானமா யிருந்ததோ என்னின், அது ஆகாது என்பார்போல், அக்கழுதையைப் பெற்றவள் மானமுடையவளே என் கின்றார். பெற்றவட்கே இல்லாத அவமானம் சொல் வார்க் கேன்! எதுகையின் அவசியத்தால் மாத்திர மன்றி வயிறுவாய்த்த கழுதையாலும் குரோதவசை மானமுடையவளாயின ளென்பது வெறும் வம்பன்றி வேறு யாவதாதற் கூடும்.

தினகர வெண்பா—செய்யுள் முதற் குறிப்பகராதி.

[எண்-செய்யுட்களின் எண்]

அ
அய்யிருநா 65
அன்றெதிரி 72

ஆ
ஆசகலு 104
ஆடுபல 48
ஆர்க்கும் 18
ஆரற்சுவர்க 78
ஆரத்தழுவினு 96
ஆராருறவாகா 34
ஆரார்க்கு 54
ஆரூர்க்குழக் 47
ஆரைவறுப்பெ 38
ஆவதறியா 60
ஆவலுடன் 23
ஆனகுல 67
ஆனை குதிரை 76

இ
இட்டமாய் 83
இப்புவிமேற் 7
இவ்வாழி 10
இந்நிலங்க 133
இன்றிரப்ப 110
இன்னநல 100
இன்னமணி 117
இன்னரினியா 24

ஈ
ஈதலுமின் 50
ஈன்றாள் 69
ஈனர்கொடை 81

உ
உண்மையறி 82
உத்தசெயத் 124
உத்தமநூல் 2
உத்தமர்கள் 84
உத்தியினு 102
உய்யுமன 64
உன்பவனி 127

ஊ
ஊரார்க்குச் 56

எ
எங்களுரை 131
எங்கிருந்து 125
எஞ்சலிலா 94
எண்ணுமெழுத் 43
எந்தநெடுஞ் 57
எப்பொழுது 93
எப்பொழுதுந் 85
எம்மையுமைப் 89
எய்தரிய 49
எய்துசிவபூசை 36
என்போடுருகு 6
என்றுமுகிலைத் 3
என்றுமுனைக் 130

ஏ
ஏகினவர்க் 111
ஏதிலார் 21
ஏந்துமுலை 14
ஏற்பதல்ல 55

ஒ
ஒப்போடொழு 31
ஒன்றுதனக்கு 61
ஒன்றுமறியா 41

ஓ
ஓதியறியு 46
ஓதியுடன் 88
ஓயாப்பரிவு 112
ஓர்ந்துணர்ந்து 22
ஓரவே 90
ஓரிடத்தி 53
ஓருமுலகிடுக்க 66

க
கண்பார்வை 74
கல்வார்கள் 44
கல்விக் கடல் 27
கள்ளர்க்குற் 32
கள்ளரையுங் 58
கற்றிலனே 45

கா
காடுமலை 79
காலங்கருதிக் 52

கு
குற்றமிகச் 35

கை
கையாற் பரிந் 26

கொ
கொங்கேறு 128
கொய்யுளவே 12

கோ
கோதென்றகற் 86

சு
சுந்தரநின் 75
சும்மாதே 71

சூ
சூதாம்பருவத் 114

செ
செல்வமிகப் 105

சை
சைவநிலை 39

த
தக்கார்க் 106
தக்ககெடி 4
தக்கதொண்டை 103
தப்பாமல் 70
தற்பரனை 120

தா
தாமதத்தி 30
தாயிழைக்குஞ் 123
தாரார்கமலத் 119

தை
தையலார் 77

தே
தேர்த்திருநாள் 132

ந
நல்லகுணமு 11
நல்வசனஞ் 15

நா
நாகராகன் 118
நாகரிக 16
நால்வகையு 91
நானுசை 20

நி
நித்தத்துவங் 68
நிந்திக்கு 63

நே
நேர்கண்டா 135
நேர்ந்தகனவி 126

நொ
நொய்துகொண்டு 17

பா
பாருலாவுங் 136

பு
புத்திரரோ 9
புந்திசெய்ய 13

பூ
பூசிமுடித் 37

பெ
பெண்புத்தி 95

பே
பேதையர்க்கு 40

பை
பைவாய் 99

போ
போதளவுஞ் 122

ம
மங்கையர்கள் 116
மன்றலமர் 129
மன்னர்க்குச் 42
மன்னரெவர்க் 73
மன்னுயிரைத் 29

மா
மாசுடையார் 19
மாபாரதத்தின் 98
மாறுகொண்ட 87
மானுர்துகி 101
மானிடர்க்கு 25

மி
மின்னர் 121

மு
முன்பாதி 1

மெ
மெய்யுலகி 51

மை
மைந்தரை 8
மைபார்த்த 108

வ
வண்டுமதுவுண 97
வந்தநெஞ்சை 134
வந்துனையெல் 107

வா
வாடினர்க்குச் 28
வாரொன்று 96a
வானுலகில் 115

வி
விப்பிரர்தெய் 33

வெ
வெம்மனத்தி 137
வெய்யகுல 59
வெல்படையை 80
வெல்லுங்காண் 109
வெல்லுமுடி 62

வே
வேலாசிவ 113
வேற்றுப்பொருள் 92

வை
வையகத்தில் 5

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

உலக முழுமையிலும் 1008 விதமான மதங்களும் 3065 பாஷைகளும் இருந்துவருகின்றனவாம்.

***

மேட்டூர் அணை வேலைஸ்தலத்தில் உள்ள ஒரு எந்திரத்தில் பாம்பொன்று சுற்றிக்கொண்டதால் 4 தினங்கள் வேலைநடவாதுபோயதென்று தெரிகிறது.

***

திருவாங்கூர் ராஜ்யத்தில் திவான் வேலை பார்த்த, திவான் பகதூர் சுப்பிரமணிய ஐயர் அப்பதவியிலிருந்து சென்றமாதம் விலகினார். அவருக்குச் சமஸ்தானத்தார் 500 ரூபாய் மாதப் பென்ஷனும், 10 ஆயிரம் ரூபாய் பரிசும் அளித்தனர், என்று திருவாங்கூர்ச் செய்தி கூறுகின்றது.

***

உலகத்திலுள்ள மக்களில் 22 கோடிப் பேர் பேசுவது ஆங்கில பாஷையாம். ஐரோப்பாவில் இப்பொழுது பிரஞ்சு பாஷை அதிகமானவர்களால் கற்கப்படுகின்றதென்றும், ஆங்கிலம் அறிந்தவர்களும் பிரஞ்சு பாஷையைக் கற்று வருகின்றனர் என்றும் தெரிகின்றது.

***

ஸர் மால்கம் காம்பல் என்னும் ஆங்கிலேயர் மணிக்கு 266 மைல் வீதம் தமது மோட்டாரில் சென்றாராம். லெப்டினண்டு ஸ்டேன்போத் என்பவர் விமானத்தில் மணிக்கு 407 மைல் வீதம் பறந்திருக்கின்றனராம். K. டன் என்பவர் மணிக்கு 110 மைல் வீதம் மோட்டார் படகை ஓட்டியிருக்கின்றாராம். இம்மூவரும் ஆங்கிலேயர் என்றும் இன்றுவரை இவர்களை வென்றவர் இல்லையென்றும் கூறப்படுகிறது.

***

ரிசல்யூட் என்னும் ஒரு பெரிய கப்பல் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு 9-வது முறையாக உலகத்தைச் சுற்றிவருகின்றது. அக்கப்பலில் 350 பேர் பிரயாணம் செய்கின்றனர். இரண்டு வாரத்திற்குமுன் அக்கப்பல் சென்னை வந்திருந்தது. சென்னையிலிருந்து கொளம்பிற்கும் பின்னர் மலேயாநாடுகளுக்கும்சென்று அங்கிருந்து ஜப்பான் செல்லும் என்று தெரிகின்றது. அக்கப்பலின் நிறை 20 ஆயிரம் டன். அக்கப்பலில் உலவுவதற்கு ஒரு பூந்தோட்டமும், நீந்தி விளையாட ஒரு குளமும் இருக்கின்றனவாம். உலகெங்கும் சென்றபின் அது அமெரிக்கா நியூயார்க்குப் போய்ச் சேரும் என்று தெரிகின்றது.

***

காந்தியடிகள் ஏசுநாதர் மதத்தைப் பற்றி ஐரோப்பியர் கூட்டமொன்றில் பேசியதாவது:— 45 ஆண்டுகளுக்குமுன் பைபில் நூலைப் படித்தேன். புதிய ஏற்பாட்டையும் நன்றாகப் படித்துள்ளேன். இந்தஇரண்டு நூலையும் படித்த பிறகு எனது இளமையில் கண்டுகொண்ட வாய்மையின் எதிரொலியே ஏசுவின் போதனையாயதுணர்ந்தேன். 'பல்லுக்குப்பல் கண்ணுக்குகண்' என்பது ஏசுவின் போதனையன்று. ஒரு அடி அடித்தால் இரண்டாவது அடியை ஏற்கவேண்டுமென்பதே அவர் கொள்கை. ஒருவர் தீங்கு இழைப்பாரானால் அவருக்கு நீ நன்மையையே செய் என்பதும் அவரது சிறந்த போதனை. இவ்விருபோதனைகளையும் மூலமாய்க் கொண்டுள கிறிஸ்துவ மதம் என்னைக் கவர்ந்தது. அப்பொழுதுதான் இதுவா ஏசு மதம் என்று வியந்தேன். ஒரு கையில் மாட்டிறைச்சியையும் ஒரு கையில் சாராயப் புட்டியையும் தாங்கியவன் கிறிஸ்தவன் என்று நான் என்சிறுவயதில் எண்ணியிருந்தேன். பைபிலைப் படித்த பிறகே உண்மை எனக்குத் தெரிய வந்தது. மலையிலிருந்து ஏசுநாதர் நிகழ்த்திய சொற்பொழிவை ஏற்று நடப்பவன் கடவுள் அருளிற்குப் பாத்திரமாவான். உலகமும் சிறக்கும். பித்தம் தெளிய மானுடச்சிறுமை அகலும். உலகமெங்கணும் அமைதியும் சகோதரத்துவமும் நிலைக்கவேண்டுமெனும் வேட்கையொடு முயன்று வாழ்பவர் உண்மைக் கிறிஸ்தவர். அவர் இருக்கையே வாழ்க்கையின் சிறப்பாகும். அவ்வாறு வாழாதார் வாழ்க்கை, சாவின் வாழ்க்கையேயாகும். கிறிஸ்து இருந்தாரா, சரித்திர சம்பந்தமான அத்தாட்சி உண்டா, என்னும் ஆராய்ச்சியில் எனக்கு ஆர்வம் இல்லை. பைபிலை ஆக்கினவர் எவராயிருந்தால் என்ன, அது கூறும் உபதேசமே முக்கியம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறதீர்



குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: குன்வஸ்ஸன், மதராஸ்.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

கோரோஜனை மாத்திரை

பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

188958

KALANILAYAM.
REG. NO. M, 2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

“ஜீவாமிருதம்”



பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரு 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனும்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு	—	விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணு ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானல் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

எற்படுத்திமது] நாஷனல் [1906

இன்ஷூரன்ஸ் கம்பேனி லிமிடேட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பேனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பேனி லிமிடேட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பேனி, மானேஜர்கள்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச்செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)